Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY — தேசிய தினசரி

போன 389 — தபால் பெட்டி எண்: 49

மலர் 3 — யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 20 ஆம் நாள் — ஜ. ஆகிர் 26 — (5-12-61) — செவ்வாய்க்கிழமை — இதழ் 251

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானால்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# 'ஸ்ரீ' வழக்கு: 6 பேர் மீது குற்றச்சாட்டு

## ஒன்பது வழக்கறிஞர்கள் ஆஜரான காட்சி

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

மோட்டார் வாகனங்களின் இலக்கத் தகட்டில் உள்ள எழுத்தை மாற்றியதாகக் குற்றம்சாட்டி ஆறுபேர்மீது யாழ்ப்பாணம் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது எதிரிகளின்சார்பில் ஐந்து புரக்டர்களின் அனுசரணையுடன் நான்கு வழக்கறிஞர்கள் ஆஜராகியிருந்தனர்.

இவ்வழக்கில் ஒரு கல்லூரி ஆசிரியரான திரு. ஈ. மகாதேவா, பருத்தித்துறைத் தொகுதி எம். பி. யின் சாரசாரதி திரு. கந்தசாமி வேலாயுதம், திரு. வைத்தி சின்னப்பு, திரு. செல்லையா ஞானசுந்தரம், திரு. அப்புத்துரை சகாதேவன் (வாடகைக்கார் சாரதி), திரு. கிருஷ்ணர் நடேசா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எம். டி. ஜி. பீட்டர் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

1951-ம் ஆண்டின் 14-ம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 24-வது விதியின் 2-ம் பிரிவுக்கு மாறாக மோட்டார்வாகனத்தின் அடையாள இலக்கத்தகட்டில் புரியாதபடி மாற்றம் செய்ததாக இவர்கள் ஆறுபேர்மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பிராசிக்கியூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ரஞ்சித் அபயசூரியா ஆஜரானர்.

எதிரிகளின் சார்பில் திரு. எம். திருச்செல்வம் கியூ. சி., திரு. எம். சிவசிதம்பரம், திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, திரு. கே. தேவராஜா ஆகியோர் திருவாளர்கள் வி. நவரத்தினம், எஸ். நடராஜா, ஆர் விஸ்வநாதன், வி. நடராஜா, எஸ். ராசையா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்கள்.

1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## பார்லிமெண்டில் டாக்டர் நாகநாதன் கேள்வி

கொழும்பு, செவ்வாய்

இம்மாதம் 14-ம் திகதிவியாழக்கிழமை நடைபெறவிருக்கும் பார்லிமெண்ட் கூட்டத்தில் நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பின்வரும்கேள்விகளை தொழில் தேசிய மய சேவை மந்திரியை கேட்பதற்காக முன்னறிவித்தல் செய்துள்ளார்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற அங்கத்தவர்கள் விடுதலை செய்யப்பட்டதை யடுத்து உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு இரண்டேயிரண்டு பஸ்களை (22 ஸ்ரீ 2954, 22 ஸ்ரீ 2955) மட்டும் அனுப்பியமை அவசரகால நிலைமையை நீடிப்பதற்கேற்ற சம்பவமொன்றை உண்டாகும் நோக்கத்துடன் செய்யப்பட்ட அரசியல் சூழ்ச்சியே தவிர வடமாகாணத்தில் பஸ் சேவையைத் திருத்த வேண்டுமென்ற நன்னோக்கத்தினல் உந்தப்பட்ட செயலல்லவென யாழ்ப்பாணத்திற் கருதப்படுகிறதென்பதை அவர் அறிவாரா? இந்த பஸ்களுள் ஒன்றை எரித்தவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்தப்பட்ட ஏஜண்டுகள் தானென்பதே யாழ்ப்பாண மக்களினதும் இ. போ. ச. ஊழியர்களினதும் ஏகமனதான கருத்தென்பதை அவர் அறிவாரா?

—

வாஷிங்டன், டிச. 4

அமெரிக்கா, நெவாடாவில் நேற்றிரவு பூமிக்கடியிலான அணுசோதனை ஒன்றை நடத்தியது. மேற்குநாடுகள் அணுசோதனையைத் தொடரும் பட்சத்தில் தானும் அணுசோதனையை தொடரப் போவதாய் ரஷ்யாவும் அறிவித்திருக்கிறது

## மட்டக்களப்பில் பெய்த பெரு மழை

### இரு பிரதான வீதிகள் பாதிக்கப்பட்டன

மட்டக்களப்பு, திங்கள்

கிழக்குமாகாணத்தில்சென்ற வார இறுதியில் பெய்த பெருமழை காரணமாக இரு பிரதான வீதிகளால் போக்குவரத்து செய்ய முடியாது போயிற்று.

கபரணை மட்டக்களப்பு வீதியும் அநுராதபுரம் குருநாகலை வீதியும் வெள்ளத்தில் அமிழ்ந்தின. மட்டக்களப்புக்குச் செல்லும் வழியிலுள்ள 214 மைல் நீழமுள்ள ரயில்வே பாதையும் வெள்ளத்தில் அமிழ்ந்துபோயிருக்கின்றது மிகவும் ஜாக்கிரதையாகத்தான் இப்பகுதியால் ரெயில் போக்குவரத்து நடைபெற்றுவருகிறது

இன்று காலை இப்பகுதியில் மழை குறைந்துள்ளதாகவும் வெள்ளம் வடிந்து வருவதாகவும் காலநிலை அவதான இலாகா அறிவித்துள்ளது.

## பெட்ரோலியம் கார்ப்பரேஷன்

கொழும்பு, திங்கள்

இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் அடுத்த ஏப்ரல் மாதத்தில் விற்பனை. விநியோகம் ஆகியவற்றை ஆரம்பிக்கும். கொலனுவையில் தலா 75,000 கலன் கொள்ளக் கூடிய 6 எண்ணை டாங்கிகள் அமைக்கப்பட்டுவருகிறது.

—

## இன்று ஜி. ஸி. ஈ. பரீட்சை

கொழும்பு, செவ்வாய்

இன்று நடைபெறவிருக்கும் கல்விப் பொது தராதரப்பத்திரப் பரீட்சை (சாதாரணம்)யில் 1,54,000 மாணவர்கள் கலந்து கொள்வார்கள்.

## தொழில் நுட்ப ஆலோசனை கமிட்டி நிறுவும் முயற்சி

### தென்கிழக்காசிய நாடுகளுக்கு இலங்கை யோசனை

கொழும்பு, திங்கள்

தொழில்நுட்ப கூட்டுறவு, தொழில்நுட்ப நிபுணர்களின் பரிமாற்றம் கைத்தொழில் அபிவிருத்தி பற்றிய இணைப்புத் திட்டம் ஆகியன சம்பந்தமான ஒரு ஆலோசனைக் கமிட்டியை நியமிக்க வேண்டுமென தென் கிழக்காசிய நாடுகளின் அதிபர்களை இலங்கை சீக்கிரம் கோரவிருக்கிறது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான 16 பெரிய கார்ப்பரேஷன்களில் 12 தோல்வியுற்றதற்கான காரணம் பற்றி அரசாங்க திட்டக் காரியாலயம் ஆராய்ந்த பின்பே இவ்விதம் தீர்மானிக்கப்பட்டுள்ளது

## கதிர்காம மடங்களை அகற்ற தீர்மானம்

### திருக்கேதீஸ்வர ஆலய சபை இந்து வாலிபர் சங்கம் ஆட்சேபனை

கொழும்பு, திங்கள்

அண்மையில் நடைபெற்ற திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் கூட்டத்தில் கதிர்காமத்திலுள்ள மடங்களை அகற்ற அரசாங்கம் தீர்மானித்திருப்பதை ஆட்சேபித்து ஏகமனதான தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

கதிர்காமத்தில் அமைந்துள்ள மடங்களை அகற்றுவது பற்றி திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, புத்தளை கிராமச் சங்கத் தலைவருக்கும், அரசாங்க நகர அமைப்பாளருக்கும் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:-

நகர அமைப்பாளர், புத்தளைக் கிராமச் சங்கத் தலைவர் பிரதம மந்திரி ஆகியோருக்கு சங்கத் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் எம்.பி., அனுப்பியுள்ள மகஜரில் கதிர்காமத்திலுள்ள மடங்கள், யாத்திரீகர்கள் தங்கும் மடங்கள்மட்டுமல்ல. ஒவ்வொரு மடத்திலும் நித்திய பூசை செய்யும் இடங்களுமுள்ளன. இந்த மடங்கள் சிறப்பாக ஸ்ரீராம கிருஷ்ண மடம், சாதிசமய பேதமின்றி யாத்திரீகர்களுக்கு சிறந்தபணி புரிவதை யாவரும் அறிவர் இந்துக்கள்மட்டுமின்றி முஸ்லிம்கள்உட்படஎல்லோருமே இந்த மடாலயங்கள் நீக்கப்படுவதை விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

கதிர்காமப் புனிதத் தலத்திலுள்ள மடங்களை அகற்ற அரசாங்கம் தீர்மானித்திருப்பதை ஆட்சேபித்து கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் மகஜர் ஒன்று அனுப்பியுள்ளனர்:-

கதிர்காமத்தில் அமைந்துள்ள மடங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் முருகக் கடவுளின் பக்தர்களால் நிறுவப்பட்டன. சில மடங்கள் புனித பூஜை செய்யும் இடங்களாகவும் இருக்கின்றன. திருவிழாக் காலங்களில் முருகன் வீதிவலம் வருகையில் இம்மடங்களில் தங்கியிருக்கும் யாத்திரீகர்கள் பற்பல பூஜைகள் செய்வதுடன் பிரார்த்தனைகளையும் மேற்கொள்கின்றனர். இந்துக்களுக்கு மட்டுமின்றி பல மதங்களைச் சேர்ந்த யாவருக்கும் பாகுபாடின்றி சிறந்த பணிபுரியும் இம்மடங்களை நீக்குவது இவர்கள் யாவருக்கும் செய்யப்படும் அநீதியாகும்.

—

## திருச்சபை கூட்டத்தில் நேருஜி பேச்சு

புதுடில்லி, டிச. 4

போர்க்குமுறல் மனப்பான்மையுடன் பிரச்னையை நோக்கக் கூடாது என இங்கு கூடியுள்ள உலக திருச்சபைகள் மகாநாட்டில் பிரதமர் நேரு பேசும்போது குறிப்பிட்டார்.

அமெரிக்க திருச்சபைப்பிரதிநிதி நேருவை வரவேற்றுப் பேசுகையில் நேருஜியின் சமாதான சேவை உலகெங்கும் பாராட்டப்படுவதாய் கூறினர். நேருஜி பேசி முடிந்துசெல்லும் போது அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் செய்தனர்.

—

## புதுடில்லியில் ஆர்ஜன்டீன அதிபர்

புதுடில்லி, டிச. 4

ஆர்ஜன்டீன அதிபர் இன்று பிற்பகல் புதுடில்லிவந்துசேர்ந்தார். விமான நிலையத்தில் உபராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் பிரதமர் நேரு ஆகியோர் வரவேற்றனர்.

# புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறக்கக் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

பொலிஸ் நிலையங்கள் இல்லாத பகுதிகளில் பொலிஸ் நிலையங்களை புதிதாகநிறுவவேண்டும் என பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

பொலிஸ் நிலையங்கள் இல்லாத பகுதிகளில் பல திருட்டுகளும் குற்றங்களும் அண்மையில் நடைபெற்றுள்ளதாகத் தெரிகிறது. பலதடவை சிறைத் தண்டனைபெற்ற குற்றவாளிகள் பலர் இந்தப்பகுதிகளில் தங்கள் கைவரிசைகளைக் காண்பிப்பதாகத் தெரியவந்துள்ளதாம்.

உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன்களின் தொகை அதிகரிக்கப்பட இருப்பதாகவும் அறியப்படுகிறது. பொலிஸ் அதிகாரிகளுக்கும் கிராமசேவகர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தவும் இலாகா கருதுவதாகத் தெரிகிறது. குற்றச் செயல்களைக் குறைக்கும் நோக்கத்துடன் கிராமசேவககர்ளுக்கு பொலிஸ அதிகாரங்கள் சிலவற்றையும் வழங்க இருப்பதாகத் தெரிகிறது. மாகாணப் பொலிஸ நிலையங்களுக்கிடையே செயல்படும் ரேடியோ தொடர்புகளும் அதிகரிக்கப்பட விருப்பதாகப் பொலிஸ இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்?

கெய்ரோ, டிச. 3

ஐக்கிய அரபு குடியரசு ஜனதிபதி நாசரைக் கொலை செய்யும் முயற்சியில் சம்பந்தப்பட்டதாக்க கூறப்படும் பிரஞ்சு அதிகாரிகளில் ஒருவர் அக்குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

# பிரதமரின் உத்தரவுக்கு எதிர்க்கட்சியினர் வரவேற்பு

கொழும்பு, திங்கள்

அரசாங்க கார்ப்பரேஷன்களின் டைரக்டர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவின் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்படக்கூடாது எனப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சி மகாநாட்டில் தெரிவித்ததை எதிர்க் கட்சித் தரப்பினர் வரவேற்றுள்ளதாகத் தெரிகிறது. பிரதமர்ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வகுத்த புதிய நியதியை யொட்டி சுதந்திரக்கட்சியின் பிரதான அங்கத்தவர்கள் மூவர் கட்சியின் செயற்குழுவில் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்படவில்லை. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் தலைவர் திரு. ரத்னேதேசப்பிரிய சேனநாயக்கா, கூ.மொ.வி.தாபன டைரக்டர் திரு எச். எம். நவரத்தின, இன்சுரன்ஸ் கார்ப்பாரஷனின் டைரக்டர் திரு. வி. கே. எட்மண்ட். ஆகிய மூவருமே செயற்குழு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்படாத கட்சி அங்கத்தவர்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா அண்மையில் பார்லிமெண்டில் மேற்படி விஷயம்பற்றிக் கேள்வி எழுப்பினர். கூ. மொ.வி.ஸ்தாபனத்தின் தலைவர் பதவியிலிருந்து கொண்டு சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டமொன்றில் திரு. ரத்னே தேசப்பிரிய சேனநாயக்கா கலந்து சொற்பொழிவாற்றியதற்கு திரு. டட்லி சேனநாயக்கா பார்லிமெண்டில் கண்டனம் தெரிவித்தார். அரசாங்க கார்ப்பரேஷன் ஒன்றின் தலைவர் அரசியலில் அதிக பங்குபற்றுவது தவறு என திரு. டட்லி கூறினர்.

# அரசாங்க டாக்டர்கள்

## தனிப்பட்ட தொழிலை நிறுத்தத் தீர்மானம்

கொழும்பு, திங்கள்

அரசாங்கம் உத்தேசித்துள்ளது போலவே அடுத்த ஆண்டு ஆரம்பத்துடன் தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்யும் வழத்கத்தை நீக்க வேண்டும் என அரசாங்க வைத்தியர்கள் சங்கத்தின் விசேஷ கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட வைத்தியர்களின் சேவை மக்களுக்குத் தேவைப்படுகிறது என அரசாங்கம் கருதினல் அதற்கு வேண்டிய புதிய திட்டமொன்றைத் தாம் உருவாக்க இருப்பதாகவும் அரசாங்க வைத்தியர்கள் சங்கம் முடிவு செய்தது. வைத்திய நிபுணர்களினது சேவை தேவைப்பட்டால் அவர்கள் தமது வேலை நேரங்களல்லாத நேரங்களில் தனிப்பட்ட வைத்தியம் செய்ய அவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டும் என அரசாங்க வைத்திய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். வைத்திய நிபுணர்களிடம் சிகிச்சை பெறச் செல்பவர்கள் டாக்டர் ஒருவரின் சிபார்சிலேயே அவ்வாறு வைத்தியம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் ஒரு நியதி அமைக்கப்படும் எனத் தெரிகிறது.

## ககாரினை ஏன் அழைத்தேன்?

### கல்வி மந்திரி விளக்கம்

கம்பஹா, திங்கள்

இலங்கை மாணவர்கள் விஞ்ஞானம்பற்றி நன்கு விளங்கிக் கொள்வதற்காகவே மேஜர் யூரி ககாரினை இங்கு தாம் வரவழைத்துள்ளதாகக் கல்விமந்திரி ஜனுப் பதியுதீன்மாமூத் கூறியுள்ளார்.

யக்கலையில் ஸ்ரீ சந்திரஜோதி வித்தியாலயத்தை நிறுவுவதற்கு அத்திவாரக்கல் நாட்டி வைத்துப் பேசுகையில் கல்வி மந்திரி மேற்கண்டவாறு கூறினர். வித்தியாலங்கார பல்கலைக்கழக உபவேந்தர் ஸ்ரீபிரக்னசாரநாயக்க தேரோ இவ்வைபவத்தில் பேசுகையில் தேசீய கல்வி முறையைச் சரிவர நடாத்த விரும்பினல் கல்வி இலாகா அறிவுமிக்க பௌத்த குருக்களின் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ருர்.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# விவசாய இலாகாபற்றி விசாரணைசெய்ய கோருவர்

கொழும்பு, திங்கள்

விவசாய இலாகா செயலாற்றிவருவது பற்றி ஒரு விரிவான விசாரணை நடாத்தும்படி அரசாங்கத்தை எதிர்க்கட்சித் தரப்பு செனட்டர்கள், நாளை செனட்சபை கூடும்போது கேட்டுக்கொள்வர் எனத் தெரிகிறது. விவசாய இலாகா செயலாற்றும் முறையை விசாரணை செய்வதற்கு ஒரு தெரிவுக்கமிட்டியை நியமிக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வாரெனத் தெரிகிறது.

விவசாய இலாகா தொழிற்படும் விதத்தை அண்மையில் ஆராய்ந்ததன் பேரில் இலாகா அரசாங்கத்தின் திட்டங்களைச் சரிவரச் செய்யவில்லை என்று தெரியவந்துள்ளதாக எதிர்க்கட்சி செனட்டர் ஒருவர் கூறியுள்ளார். இலாகாவில் உள்ள உயர்தர அதிகாரிகள் அரசாங்கத்தின் திட்டங்களைச்சீர்குலைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## பளையில் கிராம சேவகர் பரீட்சை

பளை, திங்கள்

பச்சிலைப்பள்ளிக்குரிய 11 கிராம சேவகரைத் தெரிதற்காய நேர்முகப் பரீட்சை டிசம்பர் 26 ம், ஜனவரி 4 ம் தேதிகளில் நடைபெறும். இப்பரீட்சைக்கு இப்பகுதியிலிருந்தும் 39 பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர்.


வெளிவந்துவிட்டது!

## 1962-ம் ஆண்டு மாணவர் தினக்குறிப்பு

மாணவர்களுக்கெனப் பிரத்தியேகமாக
பல விசேஷ அம்சங்களுடன்
வெளியிட்டிருக்கிறேம்.
விலை சதம் 75 மாத்திரம்

ஈழநாடு லிமிட்டெட்
சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.


# 'சுயமுயற்சியினல் முன்னேறவேண்டும்'

## பாடசாலை விழாவில் வவனியா எம். பி. பேச்சு

முள்ளியவளை, திங்கள்

"சித்தத்தைச் சிவன்பாலாக்கிச் செய்வதெல்லாம் தவமாக்கிக் கொண்டால் எதுவித துன்பமும் நேராது. மாணவப் பருவம் முதலே உணவுல், படிப்பு, விளையாட்டு முதலிய எல்லாவற்றையும் தவமாகக் கருதிச் செய்ய வேண்டும். அதனல் மன உறுதியும் தன்னம்பிக்கையும் ஏற்படும்."

தனியூற்றுச் சைவவித்தியா விருத்திச் சங்கப் பாடசாலையின் வெள்ளிவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய வவனியா வித்தியாதிகாரி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டாா.

வவனியா எம். பி. திரு தா. சிவசிதம்பரம் தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

"இங்குள்ள ஆசிரியரும், பெற்ருேரும், அபிமானிகளுமாக ரூபாய் 6000 செலவில் புதிய கட்டடம் கட்டியதைக் காண மகிழ்ச்சியடைகிறேன். மற்றப் பாடசாலைகளுக்கு இது ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். இனியும் அரசினரை நம்பிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. தமிழரின் எதிர்காலம் திசையறிகருவியில்லாத மரக்கலம் போன்றிருக்கிறது. சுயமுயற்சியினலேயே முன்னேற வேண்டும்."

சைவ வித்தியாவிருத்திச்சங்கச் செயலாளர் திரு. சு. இராசரத்தினம், முல்லைத்தீவு வட்டார வித்தியாதரிசி திரு. வி. கந்தசாமி, ஆசிரியர் திரு. க. சிவக்கொழுந்து, முள்ளியவளை கிராமசபைத் தலைவர் திரு. வே. அண்ணமலை முதலியோரும் பேசினர்.

மாணவரின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## கோவாவில் புரட்சி

புதுடில்லி, டிச. 3

கோவா, டையூ, டாமன் ஆகியவற்றில் போர்ச்சுக்கீஸியரின் அடக்கு முறைக்கு எதிராகப் பொதுஜனப் புரட்சி ஏற்படலாமென அஞ்சப்படுகிறது

## தோட்டத்தில் கைகலப்பு

### இருவர் ஆஸ்பத்திரியில்

புசல்லாவ, ஞாயிறு

புசல்லாவையைச் சேர்ந்த புப்புரஸ்ஸ, ஏரோ தோட்டத் தொழிலாளர்களானசின்னையாவுக்கும், காளிமுத்து என்பவருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் இருவருக்கும் பலத்தகாயமேற்பட்டு புசல்லாவை மருத்துவ மனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவர்கள் மீது பொலிஸார் கம்சளை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.


# அறிவிக்கின்ருேம்!

எங்கள் ஸ்தாபன ஆதரவாளர்களுக்கும்
வாடிக்கைக்காரர்களும்
ஓர் நற்செய்தி!

உங்கள் வசதியை முன்னிட்டு எங்கள் ஸ்தாபனம்
122, கே. கே. எஸ். வீதியிலிருந்து – 242, ஆஸ்பத்திரி வீதியிலிருக்கும்
இலங்கை வங்கியின்
( Bank of Ceylon )
முன்னைய கட்டடத்திற்கு
மாற்றப்படவிருக்கிறது.

இப்பொன்னுளை விரைவில் அறிவிப்போம்!

சீடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்.,
122, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

சண்டிலிப்பாய் ஸ்ரீமதி லில்லி தர்மரத்தினம், செல்வி நறுமலர், சுகர்தாரப்பகுதியைச் சேர்ந்த கனகசூரியர் இவர்களின் தகப்பனரும் கூட்டுறவுப் பரிசோதகர் தர்மரத்தினம் அவர்களின் மாமனருமாகிய நீக்கிலாப்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்கள் 4-12-61 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு காலமானர். அன்னரின் இறுதிச் சடங்குகள் 5-12-61 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் அவரது 'சிங்கமகால்' இல்லத்தில் நடைபெறும்.

R. R தர்மரத்தினம்

# கோவாவில் பலஇடங்களில்

## 24 மணிநேர ஊரடங்குச்சட்டம்

## ஒரு கிராமத்தில் மூன்று சிப்பாய்கள் கொலை

புதுடில்லி, டிச. 4

கோவாவிலுள்ள பஞ்சிம், கோண்டா, மார்கோவா ஆகிய நகரங்களில் பகலும் இரவும் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

கோவாவில் போர்ச்சுக்கீஸியர் எடுக்கும் ராணுவ முஸ்தீபைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அஞ்சுதீவுக் கரையில் நங்கூரம் பாய்ச்சி நின்ற போர்ச்சுக்கீஸிய போர்க் கப்பல் தீவைச் சுற்றி நடமாடி வருவதாகக் கூறப்படுகிறது.

மஜாலி வழியாக கோவா பிரயாணிகள் தொடர்ந்து போக்கு வரத்துச் செய்துவருகின்றனர்.

அஞ்சுதீவுக் கடலில் மீன்பிடித் தொழில் தொடர்ந்து அமைதியான முறையில் நடைபெற்று வருகிறது.

கோவா தேசிய யூனியன் தலைவர்களில் ஒருவரான கியாசின் சகோதரர் தோம்ஸ் கியாஸ் என்பவரை போர்ச்சுக்கீஸியப் பொலிசார் கைது செய்து சித்திரவதை செய்ததாக பம்பாயிலுள்ள கோவா விடுதலை இயக்கத்தினர் தெரிவித்தனர்.

கோவாவிலிருந்து போர்ச்சுக்கீஸியர் வெளியேற வேண்டுமெனக் கோரி பஞ்சிமில் மாணவர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### சிப்பாய்கள் கொலை

கோவாவிலுள்ள ஒரு கிராமத்தில் மூன்று போர்ச்சுக்கீஸிய சிப்பாய்கள் ஒரு பெண்ணைப் பலாத்காரம் செய்ய முயன்றபொழுது கிராமவாசிகள் திரண்டு மூன்று சிப்பாய்களையும் அடித்துக் கொன்றுவிட்டனராம்.

# கடாங்காவில் ஒழுங்கை நிலைநாட்ட தீவிர நடவடிக்கை

## ஷோம்பே பாரிஸ் சென்றுள்ளார்

நியுயோர்க், டிச. 4

கடாங்காவில் மீண்டும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு தீவிரமாகச் செயலாற்றுமாறு காங்கோவிலுள்ள ஐ.நா. பிரதிநிதி திரு. லின்னரை ஐ. நா. தற்காலிக தலைமைக் காரியதரிசி யூதாண்ட் கேட்டுள்ளார்.

கடாங்காவில் ஐ. நா. துருப்புக்களுக்கும் கடாங்கா துருப்புக்களுக்குமிடையில் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற சண்டைக்குப்பின் கடாங்கா துருப்புக்கள் சாலைகளை அடைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. சாலை அடைப்புக்களில் காவல் நிற்கும் கடாங்காத் துருப்புக்களை முகாம்களுக்குத் திரும்பிச் செல்லுமாறு உத்தரவிடும்படி கடாங்கா வெளிவிவகார மந்திரியை ஐ. நா. பிரதிநிதி கேட்டுள்ளார்.

ஐ. நா. படையைச் சேர்ந்த பதினொரு துருப்புக்கள் காணமல் போய்விட்டனர். அவர்களைப் பற்றி இன்னமும் தகவல் கிடைக்கவில்லை.

கடாங்கா அதிபர் ஷோம்பே பிராஸ்விலிக்குச் சென்று முன்னாள் பிரஞ்சு காங்கோ அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு பாரிஸுக்குச் சென்றுள்ளார்.

## 'சமயக் கல்வியே வழி வகுக்கும்'

திருக்கோணமலை, ஞாயிறு

"மாணவர்களிடையே சமய வாழ்வையும் உண்மைப் பொருளையும் உணர்த்துவதே எம் நோக்கம். புத்தகப் படிப்போ, தொழிற்கல்விப் படிப்போ மாணவனை ஒழுக்கசீலனாக மாற்ற முடியாது: சமயக்கல்வி ஒன்றினாற்றான் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் வளர்க்க முடியும்" என்று சென்ஜோசப் கல்லூரி அதிபர் வண. பிதா பொண்டர் தனது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினர். கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு பேராசிரியர் டபிள்யு. சமரசிங்காவும், திருமதி சமரசிங்காவும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். திருமதி சமரசிங்கா பரிசுகளை வழங்கினர்.

# 'காங்கோவில் சாந்திசேனை பணியாற்றமுடியுமா?'

## பிரதமர் நேரு கேள்வி

புதுடில்லி, டிச. 4

"உள்நாட்டில் அமைதி நிலவ வேண்டும். மொழி, ஜாதி வேற்றுமைகள் நாட்டில் நீடித்துக் கொண்டிருக்கும்பொழுது பிறருக்கு நாம் அகிம்சையை பற்றி உபதேசம் செய்ய முடியாது" என்று பாரதப்பிரதமர் நேரு நேற்று சாந்திசேனை வருடாந்த விழாவில் பேசுகையில் கூறினர்.

இவ்விழாவில் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கலந்து கொண்டு பேசுகையில் சாந்திசேனை உலகில் சாந்தியை உருவாக்குமென்று குறிப்பிட்டார்.

பிரதமர் நேரு மேலும் பேசுகையில் சாந்திசேனையை தாம் வரவேற்பதாகவும் ஆனல் பொலிஸ, ராணுவத்தைக் கலைத்துவிட வேண்டுமென்பதைத் தாம் ஒப்புக் கொள்ள முடியாதென்றும் கூறினர்.

"பொலிஸ இராணுவத்தைக் கலைத்துவிட்டு சாந்திசேனையின் சேவையை மட்டும் வைத்துக் கொள்வதென்பது இன்றைய உலகில் நடைமுறைக்குச் சாத்தியமாகாது. உதாரணமாக காங்கோவிலோ, அங்கோலவிலோ, இமயமலைப் பகுதியிலோ சாந்திசேனை பணிபுரிய முடியுமா என்று நேரு கேட்டார்.

"ஆத்மீகத் துறையில் நாம் எல்லோரையும் விட முன்னேற்றம் கண்டவர்கள் என்று கூறிக் கொள்கிறோம். ஆனல் சமூகத் துறையில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடுகையில் நாம் எவ்வளவோ பின் தங்கியுள்ளோம்" என்று பிரதமர் நேரு கூறினர்.

## செய்தித் திரள்

### வைரமோதிரம் திருட்டு

வைர மோதிரம் ஒன்றைத் திருடியதாக திருவல்லிக்கேணியைச் சேர்ந்த தையற்காரர் தங்கமணி என்ற மணி மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரியை நன்னடத்தை ஜாமீனில் மாஜிஸ்டிரேட் விடுதலை செய்தார்.

### மற்றொரு பஸ் சேவை

டிசம்பர் 6-ந் திகதியிலிருந்து சென்னையிலிருந்து சேலத்துக்கு மூன்றுவது பஸ் ஒன்று சேவைக்கு விடப்படும். இது திருவண்ணமலை, செங்கம், கரூர் வழியாகச் செல்லும்.

### 1260 பேர் கைது

கேரளாவில் கலக்டர் காரியாலயங்கள் முன்னர் மறியல் செய்ததற்காக ராஜ்யம் முழுவதிலும் இதுவரை 1260 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### அபிவிருத்தியின் வேகம்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தற்போதுள்ளதைப் போல மேலும் 50 சதவிகிதம் இருக்கமுடியும் என்று இந்தியத் தொழிலதிபர் திரு. ஜி. டி. பிர்லா கூறினர்.

### அழைப்பில்லை!

ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு தனக்கு அழைப்பு ஏதும் வரவில்லை என்று ஜனதிபதி கென்னடி தெரிவித்தார்.

### தாராசிங் வெற்றி

சீக்கியர்களின் பிரதம மதக் கமிட்டியான சிரோமணி குருத்வார பிரபந்த கமிட்டிக்கு மாஸ்டர் தாராசிங் போட்டியின்றி மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### பேராசிரியர் ஆட்சேபம்

ரஷ்ய அணு சோதனைகளை ஆட்சேபிக்கும் பிரகடனமொன்றில் பாரிஸ் சர்வகலாசாலையில் விஞ்ஞான கழகத்தைச் சேர்ந்த 66 பேராசிரியர்கள் கைச்சாத்திட்டனர்.

### தடை இப்போதில்லை

வகுப்புவாதக் கட்சிகள் மீது தடை விதிக்கும் விஷயத்தை இந்திய அரசாங்கம் தற்சமயம் ஒத்திவைத்துள்ளதாக இந்திய உள்விவகார மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்தார்

### நெடுஞ்சாலை

சென்னையிலிருந்து எண்ணூர் வரை நெடுஞ்சாலை அமைக்கும் வேலை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

### தேர்தல் நிதி 1 லட்சம்

காங்கிரஸ், சுதந்திரா ஆகிய அரசியல் கட்சிகளுக்கு கம்பனி அதிபர் ஸ்ரீ ஜே. ஆர். டி. டாட்டா ஒரு லட்சம் நன்கொடை அளித்ததை டாட்டா கெமிக்கல்ஸ் லிமிட்டெட்டின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அங்கீகரித்தது.

### போலிச் சாமியார்

பங்களூரில் சென்ற வாரம் பொலிசாரால் கைது செய்யப்பட்ட போலிச்சாமியார் சாது மாணிக்க சீவனை நீதிபதி ஜாமீனில் விடுதலை செய்தார். சாமியாரின் இரு சிஷ்யைகளான பெண்கள் பிணை நின்றனர்.

### நிதிமந்திரி பயணம்

தமிழ்நாடு நிதி மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் 4-ந் திகதி ஈரோடு சென்று கோவை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு 7-ந்திகதி சென்னை திரும்புவார்.

### இசைவிழா

தமிழ் இசைச் சங்கத்தின் 19-வது தமிழ் இசைவிழா டிசம்பர் 23-ந் திகதியன்று ராஜா அண்ணமலை மன்றத்தில் ஆரம்பமாகும். வழுவூர் ராமையாபிள்ளைக்கு இவ்விழாவில் 'இசைப் பேரறிஞர்' பட்டம் வழங்கப்படும்.

# சீன ஆக்கிரமிப்பை எதிர்க்க பாரதம் பிறநாடுகளின் உதவிபெருது

—கிருஷ்ணமேனன்

புதுடில்லி, டிச. 4

சீன ஆக்கிரமிப்பை எதிர்க்க இந்தியா வெளிநாடுகளின் உதவியை நாடாது என்றும் இவ்விதம் பிறநாடுகளின் உதவியை நாடுவது பாரதத்தின் சுய கௌரவத்துக்கு இழுக்குத் தேடுவதாக இருக்கும் என்றும் பாரத பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை பட்டினசபை

# விசேஷகூட்டத்தை ஆட்சேபித்து அங்கத்தவர் வெளியேற்றம்

## நகரசபை அந்தஸ்து தீர்மானம் வாபஸ்பெறப்பட்டது

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன் துறைப் பட்டின சபையின் விசேஷ கூட்டம் சென்ற சனிக்கிழமை தலைவர் திரு. ஏ. இராசரதினம் தலைமையில் ஆரம்பமாகியபோது இரண்டாம் வட்டார அங்கத்தவரான திரு. ஏ. வி. சதாசிவம் அன்றைய கூட்டம் சட்டப்படி செல்லுபடியாகாதென்றும் ஏனெனில் விசேஷ கூட்டம் தனிய ஒரு நோக்கத்திற்காக மட்டுமே கூட்டலாமேயல்லாமல் பல நோக்கங்களுக்காகக் கூட்ட முடியாதெனவும் தெரிவித்தார். இதற்குத் தலைவர் பதிலளிக்கையில் இக் கூட்டம் சங்கத்தின் உப விதிகளுக்கமையக் கூட்டப்பட்டதெனத் தெரிவித்தார். இதைத் திரு சதாசிவம் ஆட்சேபித்துக் கூட்டத்தைவிட்டு வெளியேறினர்.

கூட்டம் மிகுதி ஐந்து அங்கத்தவர்களுடன் தொடர்ந்து நடைபெற்றபோது யாழ்ப்பாண மாவட்ட உள்ளூர் ஆட்சி ஆணையாளரின் கடிதத்தின் படி இச்சபையின் எல்லைக்குள் இருக்கும் ஆறு வட்டாரங்களை எட்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்படவேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை மூன்று பேர் ஆதரித்தும் தலைவர் உட்பட இருவர் எதிர்த்தும் வாக்களித்தனர். ஒரு மேலதிக வாக்கால் இப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது

14-8-61ல் நிறைவேற்றப்பட்ட, பட்டின சபையை நகர சபை அந்தஸ்துக்கு உயர்த்தும் தீர்மானத்தை ரத்துச் செய்யவேண்டுமெனக் கோரும் திரு. எஸ். சிவனடியார் திரு. எம். கார்த்திகேசு திரு. இமானுவேல் ஆகியோர் கொண்டு வந்த தீர்மானம் விவாதத்துத்து எடுத்துக்கொள்ளப்பட்டது.

இப்பிரேரணையை ஆதரித்து திரு. எஸ். சிவனடியார், திரு. கார்த்திகேசு ஆகியோரும் திரு. கனகசபையும் பேசினர்.

தலைவர் இத் தீர்மானத்துக்குப் பதிலளிக்கையில் பட்டின சபையை நகரசபையாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்னர் தான் ஆதரித்ததாகவும் ஆனல் விரியிறுப்பாளர் இத் தீர்மானத்தை எதிர்ப்பதால் தானும் நகர சபையாவதை எதிர்ப்பதாகவும் ஆனல் அதற்காக பட்டின சபை நகரசபையாவதை ஐந்து வருடங்களுக்கோ அன்றிப் பத்து வருடங்களுக்கோ ஒத்திவைக்கத் தேவையில்லையெனவும் எப்பொழுது பட்டின சபை நகரசபையாவதற்குத் தகுதியடைகிறதோ அப்பொழுதே இவ் விஷயத்தை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாமென்றும் கூறினர். இதனை ஏனைய அங்கத்தவர்களும் ஆமோதித்தனர்.

## 'பாக். திட்டம் குலைந்துவிடும்'

### காஷ்மீர் பிரதமர் கருத்து

ஸ்ரீநகர், டிச. 4

காஷ்மீர் சம்பந்தமாக பாகிஸ்தானின் திட்டங்கள் குலைந்துபோகுமென்று ஜம்மு காஷ்மீர் பிரதமர் பக்ஷிகுலாம் முகம்மது நேற்று ஸ்ரீநகரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சமயசார்பற்ற அரசாங்கத்தை காஷ்மீர் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனரென்றும் தேசியஒருமைப்பாடும் நாட்டின் முன்னேற்றமும் தான் முக்கியமென்றும் பக்ஷிகுலாம் முகம்மது தெரிவித்தார்.

லடாக்கில் சீனர்கள் ஆக்கிரமித்துள்ள பகுதியிலிருந்து அவர்கள் வெளியேறவேண்டுமென்றும் கோவா விரைவில் விடுவிக்கப்படுமென்று தான் நம்புவதாகவும் காஷ்மீர் பிரதமர் கூறினர்.

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமை வர வர மோசமாகி வருவதாகவும் அவர் சொன்னர்.

## ஒபிரியன் புத்தகம் எழுதுவார்

நியுயோர்க், டிச. 4

காங்கோவில் திரைமறைவில் என்ன நடைபெறுகிறதென்பதுபற்றி தாம் ஒரு புத்தகம் எழுதப்போவதாக காங்கோவில் முன்னர் ஐ. நா. தலைமைப் பிரதிநிதியாகவிருந்த டாக்டர் ஒபிரியன் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் டயர் தொழிற்சாலை

நியுயோர்க், டிச. 4

தமிழ்நாட்டில் கடிகாரங்களையும் டயர்களையும் தயாரிக்க அமெரிக்கத் தொழிலதிபர்களுடன் தாம் வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடத்தியதாக தமிழ்நாடு கைத்தொழில் மந்திரியும் ஐ. நா.வில் இந்திய தூதுகோஷ்டி அங்கத்தவருமான திரு. ஆர். வெங்கட்ராமன் பத்திரிகை நிருபர்களிடம் தெவித்தார்.

இந்தியாவில் இரும்புக்கனியுடன் பழுப்பு நிலக்கரி கொண்டு உருக்குத் தயாரிக்க அமெரிக்க முறைகளைப் பயன்படுத்த முடியுமென்று அவர் சொன்னர்.

## லாவோஸ் அரசாங்கம்

ஜெனிவா, டிச. 3

லாவோசில் தேசிய அரசாங்கமொன்றை அமைக்குமாறு லாவோசின் முத்தரப்பு இளவரசர்களையும், லாவோசுக்கான சர்வதேசக் கமிஷன் கூட்டுத் தலைவர்களான திரு. மாக்டம்மக்டனல்டும் திரு. புஷ்கினும் ஒரு குறிப்பில் கேட்டுள்ளனர்.

**மணி வாக்கு**

'எவ்வித தியாகமுமின்றி எவ்வித நன்மையும்பெற முடியாது'.


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ20 உ (5-12 61

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## பிரதமரின் வேண்டுகோள்

ஒரு சோஷலிச ஜனநாயக ஆட்சி இலங்கையில் நிலவுவதற்காகக் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா எவ்வித திட்டங்களை வகுத்தாரோ, அவற்றை நிறைவேற்றி வைப்பதில் தமது கட்சி உழைத்து வருவதாக இரத்தினபுரியில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் ஆண்டு மகாநாட்டில் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா பெருமையுடன் பேசியிருக்கின்றார். சென்ற 16 மாதகாலமாக சுதந்திரக்கட்சி ஆதிக்கத்தில் இருந்து வருவதை அவர் குறிப்பிட்டு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபின் நாட்டில் நிலவிய எந்த அரசாங்கமும் இன்றைய அரசாங்கத்தைப்போல் சக்தியும் வலிமையும் பெற்றிருக்கவில்லையெனவும் அவர் மகிழ்ச்சிததும்பப் பேசியிருக்கின்றார்.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலையை நன்கு கவனித்து வருபவர்களுக்கு இக்கூற்று எவ்வளவு தூரம் நம்பிக்கையை ஊட்டுமோ தெரியவில்லை. அரசியலில் மாற்றங்கள் ஏற்படும் போது அதன் இடைக்காலம் மிக நெருக்கடியானதென்பதைப் பிரதமர் தமது உரையிற் குறிப்பிடத் தவறவில்லை. முக்கியமாக இரு விஷயங்கள் மக்களுக்கு மிகுந்த சிரமத்தையும் கஷ்டத்தையும் கொடுத்து வருவதாக அவர் தெரிவித்திருக்கின்றார். 1-கல்வி நிர்வாகம், 2-உணவுப்பொருள் விநியோகம். இத்துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மிக விரைவில் நிவிர்த்திசெய்யப்படுமென பிரதமர் எதிர்பார்க்கின்றார்.

தேசிய கல்வித் திட்டம் நாட்டில் பெரிய குழப்பங்களை ஏற்படுத்தியிருப்பதுடன் மக்களிடையே எதிர் காலம்பற்றிய சந்தேகங்களையும் கிளப்பியிருப்பது உண்மையே.

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகம் செய்யும் பொறுப்பையேற்றுக் கொண்டபோதிலும் இங்கும் ஊழல்கள் அகன்றபாடில்லை. இவற்றையெல்லாம் பிரதமர் உணர்ந்துள்ளார் என்பது அவருடைய பேச்சிலிருந்து நன்கு விளங்குகின்றது.

நாட்டின் நிர்வாகம் சிறப்புறுவதாயின் அதனை ஏற்று நடாத்துவோர் அந்தரங்க சுத்தியுடன் உழைக்கவேண்டும். இதன் அவசியத்தைப் பிரதமர் வற்புறுத்தியிருக்கின்றார். ஆகவேதான், நாட்டின் முன்னேற்றத்துக்காக மக்கள் தியாகங்கள் சில செய்ய வேண்டுமெனவும் சிரமங்களைப் பொருட்படுத்தாது கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமெனவும் அவர் வேண்டியுள்ளார்.

தேசிய அபிவிருத்தி வரிஒரு 'சம்பள வெட்டு' என்ற கருத்து நாட்டில் நிலவிவருகின்றது. ஆனால் பிரதமரோ இது சம்பளவெட்டு அல்லவென்றும் இதனுற்கிடைக்கும் பணம் நாட்டின் அபிவிருத்திக்காகவே செலவிடப்படுமெனவும் சமாதானம் கூறுகின்றார்.

நாட்டின் பொருளாதார நிலை கவலைக்குரியதென்பதைப் பிரதமர் உணராதிருக்கவில்லை. உலக மார்க்கெட்டில் ரப்பர், தேயிலை, தெங்குப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் வீழ்ச்சியுற்றிருப்பதும் இதற்கொரு காரணமென்பதை நாமறிவோம். இக் கஷ்ட நிலையைத் தளர்த்துவதற்காக மற்றும் அரசாங்கத்துடன் இலங்கை பேச்சுவார்த்தைகள் நடாத்தவிருப்பதாகத் தெரிகிறது.

நாட்டில் பிரிவினை மனப்பான்மையை ஏற்படுத்தி வரும் மொழிக் கொள்கைக்குத் தீர்வு கண்டுவிட்டதாகப் பிரதமர் நம்புகின்றார். தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமையும் இலங்கை வாழ் இந்தியரின் பிரச்சினைகளும் சுமுகமாகத் தீர்க்கப்படாவிடின் இலங்கைக் கிடைத்துள்ள சுதந்திரம் ஒரு வகுப்பினருக்கு மாத்திரம் அளிக்கப்பட்ட சுதந்திரமாகவே இருந்து வரும்.

செல்வத்துடன் சேர்ந்த அதிகாரமும் சலுகைகளும் அடக்கப்பட்டு, அதிகாரம் ஒரு சிலரிடமிருந்து பலருக்கு உண்மையாக மாற்றப்படும்வரை மக்களின் சுதந்திரம் உண்மையாகமாட்டதென காலஞ்சென்ற தமது கணவர் திரு பண்டாரநாயகா உறுதியாக நம்பினர் என்று கூறும் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா இலங்கை பெற்றுள்ள சுதந்திரத்தை உண்மையாக்கி நாட்டில் உள்ள சகல மக்களும் அதனை அனுபவிக்க வழி செய்வாராயின் நாடு அவரை வாழ்த்தும். சோஷலிச ஜனநாயக ஆட்சியும் இங்கு மலர ஏதுவாகும்.

# கடல்நீரை குடிநீராக்கும்பாசி

**ஆல்காக்கள் எனப்படும் சிலவகை கடற்பாசிகள் தண்ணீரில் உள்ள உப்பைப் பிரித்து சுத்தநீராக அதை மாற்றும் ஆற்றல் பெற்றிருக்கின்றன. இதுபற்றி நடந்துவரும் ஆராய்ச்சி மனிதனின் குடிநீர்ப் பிரச்சினையை அதிக செலவின்றித் தீர்த்துவைத்துவிடக்கூடும்.**

நாகரிகம் படைத்த மனிதன் உணவு பெறக்கூடிய இடமாகவும், வர்த்தகப்போக்குவரத்துக்கு வழியாகவும் கடலை மதித்துவந்திருக்கிறான். ஆனால் பெரும்பாலும் கடல்நீரை உபயோகிப்பதில்லை. ஏனெனில் அது உப்பாகவும், குடிப்பதற்கு முடியாததாகவும், விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் உதவாததாகவும் இருந்துவந்திருக்கிறது.

கடலில் இருந்து குடிதண்ணீர் எடுப்பதற்காக மனிதன் 2000 ஆண்டுகளாக முயன்று வந்திருக்கிறான். கி. மு. 49 முதல் அலெக்ஸாண்டிரியாவில் ஜூலியஸ் ஸீஸரின் ரோமாபுரிப் படைகள் குடிதண்ணீரை வடித்தெடுக்க ஆதிகாலத்து சூரியவெப்பத்தைப் பயன்படுத்தும் வேலைகளைஉபயோகித்து வந்ததாக சரித்திர சான்றுகள் தெரிவிக்கின்றன. ஆங்கிலப் பேரரசி முதலாவது எலிஸபெத் ராணி ஆங்கில கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் நீண்டகாலம் கடலில் தங்கும் பொருட்டு, உப்புநீரைக் குடிதண்ணீராக மாற்றும் இயந்திரத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்கு 9,50,000 பரிசளிப்பதாகக் கூறினர்.

### உருப்படியான வெற்றி

தாமஸ் ஜெபர்சன், யு. எஸ். ஜனதிபதியாகுமுன் கடல்நீரில் இருந்து 22 பைன்ட் (2 3/4 கலன்) குடி தண்ணீர் கிடைத்த பரிசோதனையைப் பார்த்ததாகக் கூறப்படுகிறது இதன்உற்பத்திக்கான ஒரு இரகசியசூத்திரம் அவருக்குத் தெரியாமலேயே இருந்தது; இருந்தாலும் அவர் பரிசோதனைகளை நடத்தி 32 பைன்ட் கடல் நீரிலிருந்து 31 பைன்ட் நல்ல தண்ணீரை எடுத்தார். இவ்வாறு 1791-ம் வருடத்தில் இருந்தே கடல் தண்ணீரை மாற்றுவதில் அமெரிக்கா அக்கறைகொண்டது. ஆனால் 1961-ம் ஆண்டில் தான் உருப்படியான வெற்றி கிடைத்தது. சென்ற ஜூன் மாதத்தில் பிரீபோர்ட் துறைமுகத்தில் உள்ள இயந்திரக் கருவியால் உப்புநீரை நல்ல தண்ணீராக மாற்றும் திட்டம் துவங்கியது.

மெக்ஸிகோ வளைகுடாவில் இருந்து கடல் தண்ணீர் எடுக்கப்பட்டு மிகத்தெளிவான நல்ல தண்ணீராக மாறுகின்றது; நகரமக்களுக்கு விநியோகம்செய்யப்படுகிறது. தினம் சுமார் 10 லட்சம் கலன் கடல் நீர் சுத்திகரிக்கப்படுகிறது. 1000 கலன் சுத்திகரிக்க ஒரு டாலர் (ரூ. 4-75) செலவாகிறது.

அந்நகரில் வசிக்கும் 14,000 மக்களுக்கும் இதன் வெற்றி தெரியும். இத்தண்ணீரைச் சுவைத்துப் பார்த்திருக்கிறார்கள்; அதில் ஸ்நானம் செய்திருக்கிறார்கள்; தங்கள் துணிகளை வெளுத்துப் பார்த்திருக்கிறார்கள். ஆழமான கிணறுகளில் இருந்துகிடைக்கும் தண்ணீருக்கும் இதற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை.

### இயந்திரக் கருவி

தெற்கு கலிபோர்னியாவில் தினமும் 1,00,000 கலன் கடல் நீரை சுத்திகரிக்கும் இயந்திரக் கருவி உண்டு. இது 1959 டிசம்பரில் நிறுவப்பட்டது. 24 மணி நேரத்தில் சுமார் 1,60,000 கலன் தண்ணீர் சுத்திகரிக்கப்படுகிறது இதற்காகும் செலவைக் கணக்கிட்டு வருகிறார்கள் ஆயினும் கலனுக்கு ரூ. 4-75க்கும் குறைவாகவே செலவாகிறது.

இன்னும் 6 வருடங்களில் பல சுத்திகரிப்பு நிலையங்களை ரூ. 35 கோடி செலவில் கட்ட யூ. எஸ். திட்டமிட்டுள்ளது. பல்வேறு நிலையங்களிலும் பல்வேறு செய்முறைகள் கையாளப்பட்டு எது திறமையானது எதற்கு மிகக் குறைந்த செலவாகும் என்று கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

### ரசாயன முறை

சைரக்ஸ் பல்கலைக்கழகத்தில் ரசாயன முறையொன்று பரிசோதனையில் இருக்கிறது. கடல் நீருடன் சில ரசாயனப் பொருள்களைச் சேர்க்கவே அது கெட்டியான திடப்பொருளாக மாறுகிறது. பின்னர் இத் திடப்பொருள் தனியாக உருக்கப்பட்டு நல்ல தண்ணீர் கிடைக்கிறது. ரசாயனப் பொருள் மீண்டும் உபயோகிக்கப்படுகிறது. மற்றொரு முறையில் ஆல்காக்கள் (ஒருஸெல் உள்ள கடற்பாசி) உபயோகப்படுத்தப்படுகிறது. ஆல்காக்கள் உப்பை கிரகிக்கின்றன. இது வெற்றியடைந்தால் உஷ்ணப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை; குளிர்சாதன ஏற்பாடு எதுவும் வேண்டியதிராது.

இஸ்ரவேலும் மற்றும் பாலைவனமுள்ள மற்றொரு நாடும் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் குவெயிட்டியில் ஒரு கடல்தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்னத நிறுவியிருக்கின்றன. சென்ற செப்டம்பர் மாதம் இந்த நிலையம் மஸாசூஸெட்ஸ் கம்பெனி ஒன்றினுல் நிறுவப்பட்டது. சுத்திகரிக்கப்படும் தண்ணீர் நீர்ப்பாசனத்திற்கும், குடிப்பதற்கும் உபயோகப்படுத்தப்படும். இது முக்கியமாக பாலைவனங்களிலும் கடற்கரை ஓரங்களிலும் வசிப்பவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும்.

# மலைநாட்டு மக்களுடன் கலப்பு மணம்

## உடுப்பிட்டி எம். பி. கூறும்யோசனை

உடுப்பிட்டி, திங்கள்

"மலைநாட்டு மக்களுடன் யாழ்ப்பாணப்பகுதி மக்கள் கலப்புமணம் செய்வது வருங்காலத்தில் நல்ல பயனைக் கொடுக்கும். மலைநாட்டு மக்களுடன் யாழப்பாண மக்கள் கலப்புமணம் செய்வதையே பெரிதும் விரும்புகின்றேன்."

இவ்வாறு சமீபத்தில் மலைநாட்டுப் பகுதிகளுக்குச்சென்று திரும்பிய உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தமிழன், மட்டக்களப்புத்தமிழன், மலைநாட்டுத் தமிழன் என்ற பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று திரு. சிவசிதம்பரம் கூறினர்.

"கலப்புமணம் மூலம் எமது பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்கமுடியாவிடினும் காலகதியில் பிரச்சினைகள் தீரமுடியும் என்பது எனது கருத்து. மொழி, மதம், கலாச்சாரம், வாழ்க்கைமுறை ஆகிய இணைப்புச் சங்கிலிகளால் இறுகப் பிணைக்கப்பட்ட மக்கள் அந்நியராகத் தொடர்ந்துவாழவேண்டிய அவசியமில்லை" என்று திரு சிவசிதம்பரம் தெரிவித்தார்.

# மீன்பிடித்தொழிலாளருக்கு ஆயிரம் வீடுகள்

கொழும்பு, திங்கள்

மீன்பிடித் தொழிலாளருக்கென ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளை காணி விவசாய நீர்ப்பாசன இலாகா அமைக்க விருப்பதாகத் தெரிகிறது.

அடுத்த ஆண்டு முடிவடைவதற்குள் 200 வீடுகளை அமைப்பதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

கடந்த ஆண்டு மீன்பிடித் தொழிலாளர்களுக்கென 150 வீடுகள் நிறுவபபட்டனவெனவும் இவ்வாண்டு முடியுமுன்னர் இன்னும் 100 வீடுகள் நிறுவப்பட்டுவிடும் எனவும் மீன்பிடித்துறை டைரக்டர் திரு. டி. டி. ஈ. ஏ. டி' பொன்சேக்கா கூறியுள்ளார். இலாகாவின் புள்ளிவிவரப்படி மொததமாக 800 வீடுகள் மீன்பிடித் தொழிலாளர்களுக்கென அமைக்கப்படடுக் குறைந்த வாடகையுடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## வரண்ட பகுதிகளுக்கு டியூப் கிணறுகள்

கொழும்பு, திங்கள்

இலங்கையிலுள்ள மழை குறைவான பகுதிகளில் 'டியூப்' கிணறுகள் அமைக்கப்படவிருக்கின்றன. வரண்ட நிலப் பகுதிகளில் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டை 'டியூப்' கிணறுகளை அமைத்துக் குறைத்துக் கொள்வதற்குக் காணி அமைச்சு திட்டமிட்டுள்ளது. அம்பாந்தோட்டையில் 300,000 ரூபாய் செலவில் திட்டவேலை வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

வரண்ட பகுதிகளில் குடியேறியுள்ள மக்கள் தமது தண்ணீர் தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குக் காணி இலாகா இப்போது மக்களுக்குப் பண உதவி செய்து வருகிறது.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே ஒரு கோவிலில் 6 வருஷகாலமாக ஓதுவாமூர்த்தியாக இருந்த ஓர் அன்பரைக் கப்பலில் சந்தித்தேன். "ஒரே அடியாக" இந்தியா செல்வதாயும், விஸாவரி இரண்டு வருடங்களுக்கு ரூ 800 கட்டமுடியாததாலேயே திரும்புவதாயும் சொன்னர்.

ஓதுவாருக்கு மாதம் நூறு ரூபாய்தான் சம்பளம். இதில் தானும் மனைவி, குழந்தையும் பிழைக்க வேண்டும். மனைவிக்கும் விஸா வரி உண்டு! இக்காலத்தில் அவ்வளவு சொற்ப சம்பளக்காரர் எப்படி விஸா வரி கட்டமுடியும்?

கோவிலில் பணிசெய்பவர்களுக்கு விஸாவரி விலக்கு அளிக்கப்படுமென்று முதலில் கூறப்பட்டது. முடிவில் கோவிலில் சொற்ப சம்பளம்பெறும் ஊழியரும்கூட விஸாவரி கட்டத்தான் வேண்டுமென்று ஓடர் போட்டுவிட்டதால், கோவில் ஊழியர்களும் படிப்படியாக இந்தியாவுக்குக் கட்டாயமாக ஒரேஅடியாக ந் திரும்ப நேரிட்டுள்ளது.

இலங்கையிலே ஓதுவாமூர்த்தியுள்ள கோவில் இரண்டொன்றுதான். விஸா வரி காரணமாக அவர்களும் செல்லுகிறார்கள்.

தாம் ஒரு 'விஸட்' போட்டு ரூபாய் வசூலித்ததாயும் சுமார் அறுநூறு ரூபாய் சேர்ந்ததாயும், 100க்கு 30 வீதம் கமிஷன் கொடுத்து, இந்தியாவுக்கு அனுப்ப ஒழுங்கு செய்ததாயும் தெரிவித்தார்! வசூலான பணத்துக்கும் பர்மிட் கிடைக்காதல்லவா? வர்த்தகருக்குப் புதிதாக கெடுபிடிச் சட்டங்கள் போட்டதும், கமிஷன் 45 வரை போகிறதென்றும், சில இடங்களிலே 38க்கு அனுப்ப முடிவதாயும், தனக்கு சலுகை செய்யவே 30 கமிஷனுக்கு ஒப்புக்கொண்டதாயும், 'மகிழ்ச்சியுடன்' தெரிவித்தார்.

* * *

தமிழகம்திரும்பியதும், ஏதாவது கோவிலில் ஓதுவாமூர்த்தி வேலை கிடைக்குமா? என்று கேட்டேன். "இந்தியாவிலே ஓதுவா மூர்த்திகள் பல கோவிலுக்கும் கிடையாது. ஏதோ இரண்டொரு பெரிய கோவில்களில் இருப்பர். அதுவும் 15 நாளைக்கு 12 ரூபாய் சம்பளம். நாலுபட்டை சாதம். அவ்வளவுதான்" என்றார்!

ரயிலில் கக்கூஸ் சுத்தம் செய்யும் தொழிலாளிக்கும் இந்தியாவிலே ரூ. 100 சம்பளமாம். ஆனால் கோவிலிலே பூசா காலத்தில் திருமுறைகள் ஓதும் வாய்க்கு 24 ரூபாய் தான் சம்பளம்! அந்த வேலைக்குத்தான் எவ்வளவு மதிப்பு! திருமுறைகள் வளரவேண்டுமென்று திருமுறை மகாநாடுகள் நடத்துகிறார்கள். தெய்வத் தமிழ் வாழ்க என்று கோஷம் செய்கிறார்கள். ஆனால் அந்தத் தெய்வீகத் தமிழை பண்ணோடு பலவருடம் பயின்று பாடுபவர்களுக்கு சம்பளம் இவ்வளவு மோசம்! சம்பளம் போதாதென்றால், 'இஷ்டமில்லாவிட்டால்போகலாம்' என்ற பதில்தான் கிடைக்குமாம்! அதைவிடக் குறைந்த சம்பளத்துக்கு வேறு ஆள் வரத் தயாராம்! இந்த லட்சணத்தில் இருக்கிறது, இந்துக் கோவில்களில் திருமுறைகள் வளரும் முறை!

இதுமட்டுமல்ல. கோவிலில் ஓதுவாராயிருப்பவரை நிர்வாகிகளே மிக அலட்சியமாகவும் மரியாதைக் குறைவாகவுமே பேசுவதாயும், ஓதுவாமூர்த்தித் தொழிலை விட்டுவிட்டு, ஏதாவது ஒரு வெற்றிலைபாக்குக் கடை வைத்துப் பிழைப்பது மேலென்றும் தெரிவித்தார்.

கோவிலில் தமிழில் அர்ச்சனைசெய்யும் இயக்கம் தமிழ் நாட்டிலே ஜோராக இப்போது பரவி வருகிறது. பூசையெல்லாம் வழக்கம்போல்

(5-ம் பக்கம் பார்க்க)

# "வானவெளி ஆராய்ச்சியினுல் மனிதன் கடவுளின் இரகசியத்தை அறிந்துவிட முடியாது"

## யாழ்ப்பாணத்தில் யோகிசுத்தானந்தர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கடவுளின் இரகசியங்களை அறிய மனிதன் எவ்வளவோ வழிகளில் முயல்கின்ருன். அவற்றின் ஓர் அங்கமே வானவெளியாராய்ச்சியாகும். சந்திரமண்டலத்தை எட்டிப்பிடித்து அங்கெல்லாம் குடியேறிவிடலாம் என்று மனிதன் காணும்கனவு கைகூடியதா? இத்தகைய கனவுகளையெல்லாம் கண்டுகொண்டிருக்கும் அரசியல்வாதிகளை யோகாசன வகுப்புகளுக்கு கிரமமாகச் செல்லுமாறு நான் வேண்டிக் கொள்ளுகிறேன். அப்போது தான் உலகத்தில் சண்டை சச்சரவுகள் எல்லாம் ஓய்ந்து தருமம் ஓங்கிவரும்."

இவ்வாறு கடந்த சனிக்கிழமை இரவு அகில இலங்கை திவ்விய ஜீவன சங்கத்தின் சார்பில் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடாத்தப்பெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசும்போது கவியோகி சுத்தானந்த பாரதியார் குறிப்பிட்டார்.

இச்சங்கத்தினுல் சுத்தானந்த பாரதியாருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. யாழ்ப்பாண நகர மண்டபத்தின் பிரத்தியேக வாசலிலிருந்து பஜனை சகிதம் பாரதியார் கூட்ட மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

அகில இலங்கை திவ்விய ஜீவன சங்கப் போஷகரான சுவாமி சச்சிதானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுத்தானந்த பாரதியார் தொடதந்து பேசியதாவது:-

ஐந்து கோடி வெடிமருந்து சக்தி கொண்ட அணுக்குண்டுகளைத் தயாரித்து வைத்திருக்கும் பணத்தைக்கொண்டு எத்தனையோ யோகாசனப் பாடசாலைகளை அமைக்கலாம். இந்த சமயத்தில் நான் இன்னென்றையும் நிச்சயப்படுத்திச் சொல்லுவேன். அணுக்குண்டு ஒருபோதும் தமிழன்மீது விழமாட்டாது. அந்த அணுக்குண்டு வேறு யாரோமீது குறி வைக்கப்படுகிறது.

### சைவமும் யோகமும்

உகோகாயதத்தின் குழந்தையாக சைவமும் உள்ளக் கலையின் குழந்தையாக யோகமும் விளங்குகின்றன. உள்ளக் கலையாகிய பரபக்தி உலகில் ●றந்த கலையாகும். நம் வாழ்க்கையாகிய வீணை சரிவர இசைக்கப்படுவதற்கு குருநாதனின் துணை தேவை. குருநாதனின் துணையை நாடுவதற்கான தத்துவம் எதுவோ அதையே சைவ சித்தாந்தம் தெளிவாக்குகிறது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நமது தூய்மையான வாழ்க்கைக்கு ஏற்றவையாக விளங்குகின்றன. சைவசித்தாந்தக் கருத்துக்கள் வாழ்வோடு ஒன்றியிருந்தகனல் நமது முன்னேர்கள் ஆசாரசீலராக வாழ்ந்துவந்தார்கள்.

அத்துறையில் மேம்பட்டவர்களான யாழ்ப்பாணத்து மக்களுக்கு அதிகம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. இத்தகைய ஆத்மீக தத்துவங்களை மனிதன் அறிந்து நடக்க வேண்டுமேதவிர வீண் அகம்பாவம் கொள்ளக்கூடாது.

### நட்சத்திரங்களைப் படைத்தவன் யார்?

பரந்த வானவெளியில் இடம் பெற்ற ஒரு புள்ளியின் அளவே மனிதன். அந்தப் புள்ளியைத் தவிர எத்தனை நட்சத்திரங்கள் எவ்வளவு கிரகங்கள் வானவெளியிலிருக்கின்றதென்பதை மனிதன் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நம் கண்ணுக்கு எட்டாமலும் எட்டியும் சஞ்சரிக்கின்ற நட்சத்திரங்களைப்படைத்தவன் யார்? கிரகங்களின் தோற்றமென்ன? இக்கேள்விகளுக்குக் கிடைக்கும் ஒரேயொரு பதில் கடவுள் என்பதாகும். தத்துவங்களையெல்லாம் கடந்து நிற்கும் அந்தச் சக்தியே சுத்தசக்தியாகும்.

ஒரு கிறிஸ்தவனே இஸ்லாமியனே தத்தம் மதங்களை எவ்வளவு வைராக்கியத்துடன் பின்பற்றுகிருனே அத்தகைய வைராக்கியம் சைவமக்களிடத்தும்தோன்றவேண்டும். ஆனல் "சீரங்கநாதனையும் தில்லை நடராசனையும் பீரங்கி வைத்துப் பிளப்பதுதான் எந்நாளோ" என்று பாடும் கவிஞர்களும் தமிழர்களிடையே மலிந்திருக்கிருர்கள். திருக்குறள் வகுப்பிலே மாணவர்கள் சினிமாப் படங்களை மனனஞ்செய்கிருர்கள். இப்படியாக சமயபக்தி விபரீதமாகப் போய்க்கொண்டிருக்கிறது.

சமயத்தை நன்கறியுங்கள். கண்டறிந்த உண்மைகளின் வழி நில்லுங்கள். அப்பர்போல் வாழ்ந்து மாணிக்கவாசகர் போலத் தொண்டாற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தலைமைவகித்த சுவாமி சச்சிதானந்தா தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

திவ்விய ஜீவன சங்கத்திற்கு வித்திட்டவர் சிவானந்த மகரிஷியாவார். அன்னருடன் கூடவிருந்து ஆத்மீகத் துறையில் ஈடுபட்டுழைத்தவரே சுத்தானந்த பாரதியார். அவர் தெய்வீகபுலமையுள்ளவர் மாத்திரமல்ல, ஞானமார்க்கத்தை உலகத்துக்குப் பரப்பும் பேரறிஞராகவும் திகழ்கிருர்.

திரு. கதிரவேலுவால் பாரதியாருக்கு ஓர் வாழ்த்துப்பத்திரமும் வாசித்தளிக்கப்பட்டது. செல்வி யோகீஸ்வரி இராசையா நன்றி தெரிவித்தார்.

---

## ஐயாறன்

(4ம் பக்கத்தொடர்ச்சி)

முடிந்ததும், 'ஓதுவார், 'வேற்ருகி விண்ணுகி நின்ருய் போற்றி' என்ற திருக்கைலாய பதிகத்தைப் பாட, குருக்கள் அர்ச்சனை செய்கிருர்.

திருவையாற்றில் நடந்த ஒரு திருமுறை விழாவிலே அண்ணமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பேசுகையில், நால்வர் பாடிய திருமுறையும், அருட்பாடல்களென்றும், சிவபெருமானே, அவர்கள்மூலம் பாடியுள்ளதாயும், ஆகவே கோவில்களில் 'போற்றி' அர்ச்சனை செய்வதுடன் நிறுத்தாமல், திருமுறைப் பாடல்களை எல்லாம் வளர்க்க வேண்டுமென்றும் அறிவுறுத்திஞர்கள்.

திருமுறை பயின்ற பல வாலிபர்கள் இன்னிசையுடன் பலைணுடு அவ்விழாவில் பாடினர். ஆனல் அவர்களுக்குச் சம்பளம் 24ம், 4 பட்டை சாதமுமென்ருல் யார்தான் இத்தொழிலுக்குஉடன்படுவர்! ஓதுவாமூர்த்திகளும் குடும்பத்துடன் பிழைக்க வேண்டாமா?

எல்லாக் கோவில்களிலும் ஓதுவா மூர்த்திகளை நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டு அவர்களுக்கு நியாயமான சம்பளத்தை சட்டப்படி நிர்ணயித்தாலே, திருமுறையும், தெய்வத் தமிழும் கோவில்கள் மூலம் வளரும். இன்றேல் எல்லாம் வெறும் பேச்சுடன் முடிவதாகவே இருக்கும்.

---

# 'கணக்கப்பிள்ளையைஎதிரி 5 தடவைவெட்டினுர்'

## அட்டம்பிட்டித் தோட்ட கொலை வழக்கில் சாட்சியம்

பதுளை, ஞாயிறு

அட்டாம்பிட்டித் தோட்டத்தின் பெரிய கணக்கப்பிள்ளையான ஏ. டி. எஸ். வேலுப்பிள்ளையை சென்ற 22ந் திகதி கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக அத்தோட்டத்தைச் சேர்ந்த சுப்பையா சிவன் என்பவர்மீது குற்றஞ் சாட்டி வெலிமடை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பதுளை நீதவான் திரு. ஜே. பி. சுவாரிஸ் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

22 வயதான எதிரி சுப்பையா சிவனின் சார்பில் வழக்கறிஞர் திரு. கி வ. க. சுப்பிரமணியம் ஆஜரானுர்.

பிராஸிக்கியூஷன் தரப்பில் வெலிமடை பொலிஸுடன் வழக்கறிஞர் திரு. எப். செபஸ்தியன் ஆஜரானுர்.

26 வயதான நா. கதிரவேல் முதலில் சாட்சியமளித்தார். தமது சாட்சியத்தில் அவர் கூறியதாவது:-

22ம் திகதி காலையில் தோட்டக் கோவிலுக்கு அருகில் நான் வேலை செய்துகொண்டிருந்தேன். என்னுடன் மற்றுமிரு தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர்.

### தபால் சேவகர் சொன்னுர்

அன்று காலை எட்டரை மணியளவில் அவ்வழியே வந்த அட்டாம்பிட்டித் தபால் சேவகர், தோட்டக் கணக்கப்பிள்ளையும் மற்ருெருவரும் சண்டை பிடித்ததாகத் தெரிவித்தார்.

அதைக் கேட்டதும் அந்த இடத்துக்கு நான் விரைந்தேன். என்னுடன் வேலை செய்துகொண்டிருந்த இதர இரு தொழிலாளர்களும் என்னுடன் வந்தனர். அவர்கள் சண்டை பிடித்துக் கொண்டிருந்த இடத்துக்கு சுமார் 60 யார் தூரத்தில் நின்று பார்த்தபோது சிவன் எதையோ வெட்டிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது கணக்கப்பிள்ளையின் தொப்பியையும் கைத்தடியையும் பார்த்ததால் சிவன் கணக்கப்பிள்ளையைத்தான் வெட்டிக் கொண்டிருக்கிருரென நினைத்தேன்.

அச்சமயம் தனுஷ்கோடியும் சுமார் 60 அடி தூரத்துக்கு அப்பால் நின்றதைப் பார்த்தேன்.

ஒரு கல்லைத் தூக்கி எதிரியின் மீது வீசினேன். அது அவர்மீது படவில்லை. அப்பொழுதும் எதிரி வெட்டிக்கொண்டிருந்தார். அதன்பின் எதிரி கத்தியை வீசிவிட்டு ஓட்டம் பிடித்தார். நான் அவரைப் பின் தொடர்ந்தேன்.

'ஏன் அவனைத் துரத்துகிருய்? ஓடிப்போய் தோட்டத் துரையிடமும் கணக்கப்பிள்ளையின் மனைவியிடமும் சொல்லு' என்று எதிரே வந்தவர்கள் சொன்னுர்கள். நான் தோட்டத்துரையிடமும் கணக்கப்பிள்ளை மனைவியிடமும் சென்று விஷயத்தைத் தெரிவித்தேன்.

இதன்பின் கொலைக்கு உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் கத்தியையும் இதர பொருள்களையும் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது.

அப்பொருள்கள்யாவும்அன்று கொலை நடைபெற்ற இடத்தில் காணப்பட்டதாக சாட்சி தெரிவித்தார்.

நீதவான்:- (சாட்சியிடம்) எதிரி கணக்கப்பிள்ளையை வெட்டியதை நேரில் பார்த்தீரா?

சாட்சி:-நான் பார்க்கவில்லை. ஆனல் வெட்டப்பட்ட பிரேதம் கண்டதுண்டமாகக் கிடந்ததைக் கண்டேன்.

பின்னர் தனுஷ்கோடி என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

22ம் திகதி காலை சுமார் 8-30 மணியளவில் கணக்கப்பிள்ளையும நானும் தோட்ட வீதியில் பேசிக்கொண்டு சென்ருேம். சில தூரம் சென்றதும் நான் திரும்பிச் சென்றேன். அப்பொழுது "தனுஷ்கோடி, தனுஷ்கோடி" என்ற சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தேன். கணக்கப்பிள்ளையும் எதிரியும் கட்டிப்பிடித்து இழுபறிப்பட்டார்கள்.

நான் அவர்களிடம் சென்றேன். சிவனிடமிருக்கும் கத்தியைப் பறி என்று கணக்கப்பிள்ளை சொன்னுர். நான் கத்தியைப் பறிக்க முயற்சி செய்கையில் எனது நடுவிரலில் காயம் பட்டது. இதனுல் திகிலடைந்த நான் உதவிக்கு ஆட்களைக் கூட்டிவர ஓடினேன்.

### ஐந்து தடவை எதிரி வெட்டினுர்

சில தூரம் சென்று திரும்பிப் பார்த்தபொழுது இழுபறிப்பட்ட இருவரும் தண்ணீர்க்கானருகே விழுந்து எழுந்தார்கள். அடுத்து சில வினடியில் கணக்கப்பிள்ளை கீழே விழுந்தார். அச்சமயம் எதிரி அவரை ஐந்து தடவைகள் வெட்டினுர். "ஐயோ" என்ற அலறல் குரல் கேட்டது.

பீதியடைந்த நான் இதுபற்றித் தோட்டத் துரையிடம் தெரிவிப்பதற்கு ஓடினேன்."

கொல்லப்பட்டவரின் முகம் அடையாளம் காண முடியாதபடி கோரமாகச் சிதைக்கப்பட்டும் வலது கை உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்டும் கால்கள் வெட்டப்பட்டும் கிடந்தனவென்று தனுஷ்கோடி மேலும் தெரிவித்தார்.

மேல்விசாரணையை பண்டாரவளை நீதிமன்றத்தில் இம்மாதம் நான்காம் திகதிக்குத் தவணையிட்ட நீதிபதி எதிரியை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

---

## ரயில்முன் விழுந்து மாண்டவர்

### தெல்கொட சங்கக் கடை மனேஜர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இனந்தெரியாத ஒருவர் ஓடிக்கொண்டிருந்த புகையிரதத்துக்கு முன்னல் வீழ்ந்து யாழ்ப்பாணம் நீராவியடிக்கு அண்மையில் தற்கொலை செய்துகொண்டதும் இறந்த அந்நபரை அடையாளம் கண்டுகொள்வதில் பொலிசார் நடவடிக்கை எடுத்ததும் முன்னர் தெரிந்ததே.

இறந்தவரின் இனத்தவர்கள்மூலம் இனந்தெரியாதவர் யார் என்பதை யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் சில்வாவினுல் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!

இறந்தவரின் இனத்தவர்கள் யாழ்ப்பாணத்துக்குவந்து அவரின் சடலத்தை அடக்கம் செய்துவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

இதன்படி தற்கொலைசெய்து கொண்டவர் தெல்கொட கூட்டுறவுப் பண்டக சாலையின் மனேஜரான ஐ. எல். பெரேரா என்பதும் அவர் மீகசாவத்தைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்தவரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருக்கு வயது 30.

---

## புதிதாக 49 டாக்டர்களுக்கு வியாழன் நியமனம்

கொழும்பு, திங்கள்

இவ்வாண்டு ஆகஸ்டில் வைத்திய இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து, இதுவரை நியமனம் பெற்றுக்கொள்ளாத டாக்டர்கள் 49 பேருக்கும் வியாழக்கிழமையன்று நியமனம் வழங்கப்படும் எனத் தெரிகிறது. 'உறுதிப் பத்திரம்' ஒன்றுக்குக் கைச்சாத்திட மறுத்தபடியால் இந்த டாக்டர்கள் 49 பேருக்கும் அரசாங்க நியமனம் வழங்கப்படவில்லை. நவம்பர் 8ந் திகதியன்று அரசாகக வைத்தியர்கள் சங்கம் சுகாதார அமைச்சரைச் சந்தித்து நடாத்திய பேச்சுவார்த்தையின் பயனுக இந்த டாக்டர்களுக்கு அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நியமனம் வழங்குவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவர்களது நியமனங்கள் அரசாங்கத்தின் அங்கீகாரத்தைக் காத்திருந்தன. அரசாங்கம் வைத்திய பட்டம் பெறுபவர்கள் குறிக்கப்பட்ட ஒரு கால அளவுக்கு அரசாங்கத்துக்குச் சேவையயற்ற வேண்டும் என அரசாங்கம் புதிய சட்டத்தை நிறைவேற்றவிருக்கிறது எனத் தெரிகிறது.

## தோல்வியடைந்த அபேட்சகர் குத்திக் கொலை

### பலப்பிட்டி பட்டினசபைத் தேர்தலில் கைகலப்பு

கொழும்பு, திங்கள்

பலப்பிட்டி பட்டினசபைத் தேர்தலில் ஏற்பட்ட ஒரு கைகலப்பில் ஒருவர் இறந்துவிட்டார். மற்றும் எட்டுப்பேர் ஆபத்தான காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தேர்தலில் வெற்றி பெற்ற பகுதியினருக்கும் தோல்வியடைந்தவர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. இச்சம்பவம் நேற்று நடைபெற்றது.

தோல்வியடைந்த முதலாவது வட்டார அபேட்சகரான பி. மெண்டிஸ் என்பவர் கத்தியால் குத்தப்பட்டார். ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்கு முன்னரே அவர் இறந்துவிட்டார்.

இறந்தவர் லொறியிலிருந்து இறங்கி வெற்றிபெற்ற அங்கத்தவரை அவதூருகப் பேசியதையடுத்தே இக்கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

---

## தாலி திருடினுர்

### ஆறுமாதச்சிறை

சாவகச்சேரி, திங்கள்

மாவனலைச் சேர்ந்த எஸ. கருப்பையா என்பவர் ரூபா 700 பெறுமதியான தாலிக்கொடியையும் ரூபா 100 செக்கையும் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் 6 மாத கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

# கூரைவழியாக கடைக்குள் இறங்கித் திருடினராம்

தெல்லிப்பழை, ஞாயிறு

சண்டிலிப்பாய்ச் சந்தையில் நடராசா சண்முகராசா என்பவருக்குச் சொந்தமான கடையை இரவோடிரவாக உடைத்து, அக்கடையில் இருந்து பொருட்களும், ரொக்கமும் திருடியதாக சங்கானை கிழக்கைச்சேர்ந்த முத்தையா தருமலிங்கம் என்பவர் மீது சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுமல்லாகம் நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நடராசா சண்முகராசா வாக்குமூலமளிக்கையில் கூறியதாவது:-

சென்ற 7-5-61மாலை7மணிக்கு சண்டிலிப்பாய் சந்தையில் உள்ள எனது கடையைப் பூட்டி விட்டு வீட்டுக்குப் போனேன். வீட்டிற்கும் கடைக்கும் 440 யார் தூரமிருக்கும். மறுநாட் காலை வியாபாரம் செய்வதற்காகக் கடையைத் திறக்கவந்தேன். வந்த சமயம் ஓடுபிரிக்கப்பட்டிருந்ததுகண்டு யாரோ கடையினுள் புகுந்து பொருட்களைத் திருடியிருக்கலாம் எனச் சந்தேகம்கொண்டு சங்கானைப் பொலிஸாரிடம் புகார் செய்தேன். சங்கானைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. கே. குமாருடன் கடைக்கு வந்து கடையைத் திறந்தேன். மேசையினுள் இருந்த காசைக்காணவில்லை. காட்சிப் பெட்டியினுள் இருந்த பிஸ்கட் பைகள் வெளியே கிடந்தன. மற்றும் பொருள்கள் பலவற்றைக் காணவில்லை.

சங்கானைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. கே. குமார் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

கடையில் ஓடுகளைப்பிரித்து ஆட்கள் இறங்கி ஏறிய அடையாளங்கள் காணப்பட்டன. நான் கடைக்கு கைரேகை நிபுணர் வருமட்டும் பொலிஸ் பாதுகாவல் போட்டேன். ரேகை நிபுணர் வந்ததும் கடையில் இருந்த அடையாளங்களை எடுத்தேன். ஆங்கு எடுக்கப்பட்ட அடையாளங்கள் முத்தையா தருமலிங்கத்தின் அடையாளங்களுடன் பொருந்தியிருந்தன.

எதிரி தான் சுற்றவாளியென்று கூறினர். நீதிபதி வழக்கு விசாரணையை ஜனவரி மாதம் எட்டாம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## அஞ்சுதீவில் போர்ச்சுக்கல் கொடி

புதுடில்லி, டிச. 3

அஞ்சுதீவில் முதல்தடவையாக போர்ச்சுக்கீஸியர் சென்ற வெள்ளிக்கிழமை தங்கள் போர்ச்சுக்கீஸிய கொடியைப் பறக்கவிட்டதாம அங்கிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

கோவா எல்லைப் பகுதியிலுள்ள மக்களின் உயிரையும் உடமையையும் பாதுகாக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக இந்தியப் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. மேனன் அறிவித்தார்.

# கசாப்புக் கடைக்காரர்கள் வேலைநிறுத்தம் செய்வர்

கண்டி, ஞாயிறு

இங்குள்ள சகல சசாப்புக் கடைக்காரர்களும் தாம் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக மாநகரசபை கமிஷனருக்கும், நகரமேயருக்கும் இறுதியான அறிவித்தல் விடுத்துள்ளனர்.

'கண்டியிலுள்ள கசாப்புக் கடைக்காரர்கள் எருமை இறைச்சியை மாட்டிறைச்சி என்றும் நாய் இறைச்சியை ஆட்டிறைச்சி என்றும் விற்பனை செய்கிருர்கள்' என கண்டி மாநகரசபை அங்கத்தவர் திரு. ஜி. பி. டி' சில்வா சென்ற மாநகரசபை மாதாந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டதை ஆட்சேபித்தே இவர்கள் வேலை நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

திரு. சில்வா மாநகரசபையில் தாம் கூறியதை உண்மையென நிரூபிக்கவேண்டும். அல்லது அதை வாபஸ் பெறவேண்டுமென்றும் அவ்விதமில்லாவிடில் திங்கட்கிழமை தொடக்கம் தாம் வேலைநிறுத்தம் செய்யப் போவதாகவும்கசாப்புக்கடைக் காரர்கள் அறிவித்துள்ளனர்.

திரு. சில்வா இவ்விதம்குறிப்பிட்டபின்னர் இறைச்சி விற்பனவு குறைந்துள்ளதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

# "தொழிற்சங்க வளர்ச்சி குன்றி வருகிறது"

## மின்சாரத் தொழிலாளர் சங்க கூட்டத்தில் கவலை

யாழ்ப்பாணம், திங்கள்

"தொழிற் சங்கங்கள் மேலதிகாரிகளுடன் சண்டைபிடிப்பதற்காக ஆரம்பிக்கப்படவில்லை. தொழிற்சங்க அங்கத்தவர்களுடைய உரிமையையும் நன்மையையும் பாதுகாக்கவே இவைகள் ஆரம்பிக்கப்பட்டன என்று தமது தொழில் ஸ்தாபனத்தில் கடமையைச் செய்யாதிருப்பவர்கள் சங்கத்தில் இருப்பதற்கே அருகதையற்றவர்கள்".

இவ்வாறு ஞாயிற்றுகிழமை யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை மின்சாரத்தொழிலாளர்சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் 3-வது வருடாந்தக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய அகில இலங்கை ஆஸ்பத்திரித் தொழிலாளர் சங்க இணைக் காரியதரிசிகளில் ஒருவரான திரு. எஸ். ஆர். அருமைநாயகம் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திரு. ஜே. செபஸ்தியான் தலைமை வகித்தார்.

திரு. அருமைநாயகம் மேலும் கூறியதாவது:-

காலஞ்சென்ற திரு பண்டாரநாயக்கா தொழிற் சங்கங்களை வளர்ப்பதற்கு எவ்வளவோ ஆதரவாக இருந்தார். தொழிலாளரின் சங்க அங்கத்துவப் பணத்தை அவர்களது சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு அனுமதி கொடுத்தவரும் அவரே. தொழிற்சங்கங்களை வளர்ப்பதற்கு எவ்வளவுதூரத்திற்கு காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா உதவினரோ அவ்வளவு தூரத்திற்குதொழிற் சங்கங்களை அழிப்பதற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முனைகிருர்.

இப்பொழுது திரு பண்டாரநாயக்கா உயிருடன் இருப்பாரேயானுல் அவரது மனைவியாரின் அழிவுத் திட்டங்களைப் பார்த்துக் கண்ணீர் விடுவார்.

இந்த அரசாங்கத்திலே உள்ள உயர்தர அதிகாரிகள் கைலஞ்ச ஊழல்களைப் பற்றியே நாம் முறையிடுவதை கேட்கத்தயாராக வில்லாமல் எமக்கு வாய்ப்பூட்டைப் போட்டு வைத்திருக்கிருர்கள்.

எமது தொழிற் சங்கங்களைப் பலப்படுத்தும் வழிகளால் நாம் ஒற்றுமையாக இருந்து சந்தர்ப்பம் வருங்காலங்களில் உரிமைகளைப் பெற ஆயத்தமாகவிருக்கவேண்டும்.

தேசிய அபிவிருத்தி வரி ஓர் அநியாயமானதாகும். அமைச்சர்களும் பாராளுமன்ற அங்கத்தவர்களும் குஷியாக உலகம் சுற்றும் படலத்தில் இருக்கிருர்கள். லட்சக்கணக்கான ரூபாய்கள் கட்டிடங்களில் செலவழித்து அவை உபயோகமற்ற நிலையிலிருக்கின்றன. இதற்கு உதாரணம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கட்டிடங்கள். சென்ற 10 வருடகாலமாக ஓர் தண்ணீர் தாங்கியைக் கட்டுகிருர்கள். அது எப்போது முற்றுப் பெறுமென்பது ஒருவருக்கும் தெரியவில்லை. இப்படியானவற்றில் பணத்தைத் தேங்க விடுவதற்காக தேசிய அபிவிருத்தி வரி அறவிடப்படப் போகிறது?

தபால், தந்தி தொழிலார் சங்கப்பிரதிநிதியான திரு. வி. சி. பரமானந்தம் பேசியதாவது:-

முன்னைய அரசாங்கத்தில் வளர்ந்து கொண்டுவந்த தொழிற்சங்கங்கள் இப்பொழுது வீழ்ச்சியடைந்துகொண்டு வருகின்றன. தொழிலாளர் தமது சங்கங்கள் பற்றி அக்கறையுடன் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் வளர்ச்சி காணக்கூடியதாக இருக்கும் மத்திய வகுப்பினரைப் பற்றித் தொழிலாளர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தாய் சங்கக்காரியதரிசியான திரு. பி. எப். பெரேரா பேசுகையில், அரசாங்கம் உடனடியாக அவசரகாலச் சட்டத்தை எடுக்க வேண்டும் என்று கூறினர்.

திருவாளர்கள், எஸ். விசுவலிங்கம், கே. செல்லத்துரை, எம். செல்லையா, ஏ. ஏ. குக் ஆகியோரும் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தலின் போது தலைவராக திரு. ஜே. செபஸ்தியானும், உபதலைவராக திரு. ஏ. ஈ. பென்சமினும், காரியதரிசியாக திரு. ஆர். தங்கமயிலும், உபகாரியதரிசியாக திரு. கே. தம்பையாவும் தனதிகாரியாக திரு. ஏ. கனகசபையும் தெரிவு செய்யப்பட்டனர். ஐந்துபேர் நிருவாக சபை அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## "பழம்பெருமை பேசிப்பயனில்லை"

### உடுப்பிட்டி எம். பி. கருத்து

உடுப்பிட்டி, திங்கள்

"பழம்பெருமை பேசிப் பேசிப் பகற்கனவு காணுவதை விட, நமது மொழியைத் திக்கெட்டும் பரவச்செய்யவேண்டியது தமிழரின் கடமையாகும். வீட்டிலே கணவன், மனைவியுடன் ஆங்கிலத்தில் உரையாடுவதை நிறுத்தி அழகுதமிழில் பேசவேண்டும். அதிலே தான் இல்லற இன்பத்தைக் காண முடியும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நெல்லியடியில் புதிதாகநிறுவப்பட்ட வாணி நூலகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார். தொடர்ந்து திரு. சிவசிதம்பரம் கூறியதாவது:-

கல்வியென்பது சுவரெழுப்பிய கோபுரத்தில் எட்டாக்காயாக இருந்தகாலம் மலையேறிவிட்டது. கம்பனும் வள்ளுவனும் சாதாரண குடிசையிலே, சாதாரண மக்கள் மடியிலே தவழ்ந்து விளையாடுமளவுக்கு அச்சுலகு இன்று நிலைமையைமாற்றியமைத்துள்ளது. எனினும், இத்திசைநோக்கி முன்னேற இடமுண்டு என்னும் நோக்குடனேயே, இந்நூலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது."

பண்டிதர் கே. வீரகத்தி நன்றி கூறினர்.

## ஸ்டீவன்சன்-கென்னடி சம்பாஷணை

வாஷிங்டன், டிச. 3

ஐ. நா. வில் அமெரிக்க தலைமைப் பிரதிநிதியாகவுள்ள திரு. அட்லாய்ஸ் ஸ்டீவன்சன் ஜனதிபதி கென்னடியைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். ஐ. நா. வில் நவசீனவுக்கு அங்கத்துவமளிக்கும் விஷயம் உட்பட பல்வேறு விஷயங்கள் பற்றி அவர்கள் பேசியதாக திரு. ஸ்டீவன்சன் பின்னர் தெரிவித்தார். படை குறைப்பு, அணு ஆயுத பரீட்சைத் தடை, நேசநாடுகளின் அந்திய விவகாரக் கொள்கை ஆகியவைகள் பற்றியும், தாங்கள் பேசியதாக அவர் கூறினர்.

ஐ. நா. சபையில் தேசிய சீன தனது அங்கத்துவத்தைத் தொடர்ந்து வைத்திருக்குமென்று தாம் உறுதியாக நம்புவதாக திரு. ஸ்டீவன்சன் தெரிவித்தார்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினிய இன்டஸ்ரீஸ் லிமிட்
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J. D



குனேகா சென்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருநெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:
செல்வாஸ் (SELVAS)
(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)
31, செட்டியார் தெரு, கொழும்பு.

## எதிரிக்கு 'வாரண்ட்'

தெல்லிப்பழை, ஞாயிறு
அளவெட்டியைச்சேர்ந்த முத்து செல்லத்துரை என்பவர் வருமானவரி அனுமதியின்றியும், உத்தரவில்லாமல் அதிகப்படியான ஆட்களை எற்றிச் சென்றதாகவும் சுன்னுகம் பொலிசாரால் குற்றஞ்சாட்'ப்பட்டு மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி கோர்ட்டில் ஆஜராகவில்லை.

நீதிபதி எதிரியைக் கைது செய்ய 'வாரண்ட்' பிறப்பித்து வழக்கை டிசம்பர் 21-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

சுன்னுகம் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. டி. ஜே. ஏ. கலன்சூரியா வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

## நெல்லியடி விளையாட்டுக்கழக நிர்வாகிகள்

உடுப்பிட்டி, திங்கள்
பின்வருவோர் நெல்லியடி விளையாட்டுக்கழகப் புத்தாண்டு உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர் திரு. கே. சுப்பிரமணியம், தலைவர் திரு.நா.திரவியம், செயலாளர் திரு. எஸ். இராஜேந்திரம், பொருளாளர் திரு. என். தருமராஜா.

## கட்டளைக் குரு இடமாற்றம்

உடுப்பிட்டி. சனி
இதுவரை வதிரி, கரவெட்டி, துன்னலை ஆகிய இடங்களில் குருப்பிரசாதியாக இருந்த வண. ஜே. ஏ. கருணைகர அடிகளாரின் இடத்துக்கு வண. எல். ஜோசேப் அடிகளார் இம் மாதந் தொடக்கம் கடமையாற்ற அனுப்பப்பட்டுள்ளார்.

## பறவைகளில் அதிக கதிரியக்கம்

புதுடில்லி, டிச. 3
பறவைகளில் அதிகமான கதிரியக்கம் இருப்பதாக இந்திய அணுசக்தி நிலையம் கண்டு பிடித்துள்ளது.

மழைகாலங்களில் ராஷ்யாவிலிருந்து பறவைகள் இந்தியாவை நோக்கி வருவதாகவும் இதுபற்றி நடத்திய ஒரு பரிசோதனையில் எட்டு நீர்த்தாராக்களில் கதிரியக்கம் அதிகமாகக் காணப்பட்டதாகவும் இந்திய அணுசக்தி நிலையம் குறிப்பிட்டுள்ளது.

## இரத்தினபுரியில் 'பால்' மாற்றம்

இரத்தினபுரி, ஞாயிறு
இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் சென்றவருடம் நவம்பாமாதம் பிறந்த பெண் குழந்தையின் பெயர் பதிவுசெய்கையில் ஏற்பட்ட தவறினல் ஆணின் பெயராக மாற்றப்பட்டது.

பெற்ரேர் தமது பிள்ளைக்கு பெண்ணின் பெயரையே பதிவு செய்வதற்காக கொடுத்திருந்தார்கள். ஆனல் பதிவுசெய்யும்போது ஏற்பட்ட பிழை காரணமாக பெண்பிள்ளையின் தந்தை கச்சேரிக்கும் ஆஸ்பத்திரிக்கும் அலையவேண்டி வந்துள்ளது.

ஒன்பது மாதங்களாக பெண் பிள்ளையின் தந்தை அலைந்து வருகிரூர். ஆனல் இன்னும் அவர் இது விஷயத்தில் முடிவு காணவில்லை.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

செவ்வாய் 5-12-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துககள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினட்.

இரவு 7-00 ருக்மணிசர்மா-பாட்டு, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 திசைகடந்த இசை, 9-45 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 ராதா சுப்பிரமணியம் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 தகம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கம்பன்கவிநயம்-பேச்சு, 7-45 பல்லடம் வி. என். ராஜன் - புல்லாங்குழல், 9-15 சென்னை அஞ்சல், 9-30 நாட்டுப்பாடல்கள், 9-50 குரல் சஞ்சிகை நிகழ்ச்சி.

## வவனியா உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

வவனியா, ஞாயிறு
வவனியாவில் ஒரு மாதகலமாக நடைபெற்றுவந்த உதைபந்தாட்டப் போட்டியில், வவனியா ஐக்கிய விளையாட்டுக் கழகம் 'ஏ', 'பி' கோஷ்டிகள், றேமாஸ் கிளப், ஒலிம்பிக் கிளப், வவனியாக் கிருஷிகப் பாடசாலை, வவனியா மகா வித்தியாலயத், முல்லைத்தீவு ஆகிய கேஷ்டிகள் பங்குபற்றன. இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் கூடிய புள்ளிகளை வவனியா ஒலிம்பிக் கிளப்பும், வவனியா ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பெற்று முன்னணியில் நிற்கின்றன.

நேற்று வவனியா மகாவித்திலாலயத்துக்கும் றேமாஸ் கிளப்புக்கும் இடையில் வவனியா முற்றவெளி மைதானத்தில் நடைபற்ற ஆட்டத்தில் றேமாஸ் கிளப் மகாவித்தியாலயச் கோஷ்டியை 6—2 கோல்களால் தோற்கடித்தது. மத்தியஸ்தராகத் திரு. குருசாமி கடமையாற்றினர்.

வவனியா ஒலிம்பிக் கிளப்புச்கும், மகாவித்தியாலயக் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற மற்ருரு ஆட்டத்தில் ஒலிம்பிக்கிளப் மகாவித்தியாலயத்தை 5—0 கோலால் தோற்கடித்தது. மத்தியஸ்தராக திரு. பி. நவரத்தினம் கடமையாற்றினர்.

## ககாரினுக்கு பம்பாய் வரவேற்பு

பம்பாய், டிச. 3
சோவியத் யூனியனின் முதலாவது வானவெளி வீரர் மேஜர் யூரி ககாரினுக்கு பம்பாய் நகரசபை நேற்று வரவேற்புபசாரமொன்று அளித்தது. இந்த உபசாரத்தில் மேஜர் ககாரின் பேசுகையில் வறுமை, நோய், கல்வி அறிவு இல்லாமை ஆகியவைகளை எதிர்த்துப் போராடுவது தான் முக்கியம் என்ருர்.


நான் விரும்புவது

# நெஸ்டோமோல்ட்

அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது...






குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸ் ஸில்ஸ**

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

# நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது

# தோட்டங்களில் 50சதவிகிதம் இலங்கையருக்கு இடம்

## சுதந்திரக்கட்சிமகாநாட்டில் நிறைவேறிய தீர்மானம்

இரத்தினபுரி, ஞாயிறு

தோட்டங்களில் காலியாகும் இடங்களுக்கு ஆட்களை எடுக்கும் பொழுது 50 சத விகிதமனோர் இலங்கையராக எடுக்கப்பட வேண்டுமென்பதைக் கவனிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று இரத்தினபுரியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மகாநாட்டில் நிறைவேறியது.

மகாநாட்டில் மொத்தம் பத்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"சிங்களத்தில் உத்தியோக அலுவல்களைச் செய்வதற்கு அரசாங்கம் எடுத்து வரும் முயற்சியைப் பாராட்டி நன்றி தெரிவிப்பதுடன் உத்தியோக மொழியை அமுல் நடத்துவதிலுள் இடையூறுகளை அகற்றுவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படியும் மகாநாடுகேட்டுக்கொள்கிறது" என்றும் தீர்மானமும் மகாநாட்டில் நிறைவேறியது.

பின்தங்கிய நாடுகளுக்குப் பொதுப்படையான முக்கிய பிரச்னைகளைப் பற்றி ஆராய்வதற்கு ஆசிய ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளைக்கொண்ட மகாநாடு ஒறைக் கூட்ட வேண்டுமென்று குருநாகலை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல் நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

# 'மோட்டார் வான்' வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

## சுப்ரீம் கோர்ட் தீர்ப்புவராததே காரணம்

யாழ்ப்பாணம்,செவ்வாய்

குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாக குற்றஞ்சாட்டி தனிப்பட்ட 'மோட்டார் வான்' சாரதிகள் மீது தொடரப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட சாரதிகள் நேற்று யாழ்ப்பாணம் மாஜிரேட் கோர்ட்டில் ஆஜரானபோது சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு வராதபடியால் மாஜிஸ்ரேட் இவ்வழக்குச் சம்பந்தமான தீர்ப்புக்களையும் விசாரணைகளையும் மீண்டும் ஒத்திவைத்தார்.

குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகப் பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாக குற்றஞ்சாட்டி 50 வான் சாரதிகள் மீது யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எம். டி. ஜி. பீட்டர் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இவற்றில் ஒரு வழக்கு பரீட்சார்த்தமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும், விசாரணையின் முடிவில் வழக்கு நிரூபிக்கப்படவில்லையெனத் தெரிவித்த மாஜிஸ்ரேட் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியதும் இத் தீர்ப்பை ஆட்சேபித்து பொலிசார் அப்பீல் செய்ததும் நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

எதிரிகள் சார்பில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், ஜிம்மி இராசரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகி. அவை தனிப்பட்ட மோட்டார் கார் ஆகப் பதிவு செய்யப்படவில்லையெனவும், 8 பேருக்கு மேல் ஏற்றக்கூடிய ஆசன வசதியிருப்பதால் அது 'மோட்டார் கோச்சு' எனவும் அதனால் கூடுதலான பிரயாணிகளை ஏற்றலாமென வாதாடியதும் தெரிந்ததே!

இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட 50 சாரதிகளும் ஒவ்வொருவராக மாஜிஸரேடினல் அழைக்கப்பட்டனர். இச்சாரதிகள் அங்கு பிரசன்னமானபோது நீண்ட கியூ வரிசையொன்றையே அவர்கள் உருவாக்கி நீதிமன்றம் முழுவதையும் நிரப்பியிருந்தனர். இவ்வழக்கின் தீர்ப்பை அறிவதற்காக அங்கு பெருங்கூட்டம் காத்திருந்தது.

சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு வராதபடியால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சாரதிகளை ஜனவரி மாதத்தில் 15, 22, 29ம் திகதிகளில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டது.

# முள்ளியவளைப்பகுதியில் வெள்ளத்தினல்பயிர்கள்சேதம்

## குளங்களில் உடைப்பு

முள்ளியவளை, திங்கள்

இப் பகுதியில் தொடர்ந்து பெருமழை பெய்துவருவதால், தாழ்ந்த பகுதிகளில் விவசாயம் செய்தவர்கள் பெரும் கவலையடைந்துள்ளனர். பல நாட்களாகத் தொடர்ந்து பயிர்களை மூடி வெள்ளம் பாய்வதால்,பயிர்கள் அழுகிவிட்டதே கவலைக்குக் காரணமாகும்.

கடந்த இருவாரங்களாகப் பெய்யும் மழை காரணமாக, தவசிகுளம், குஞ்சுக் கோடரிக் கல்லுக்குளம்முதலியசிறு குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. தண்ணீர் முறிப்பு, கணுக்கேணிக்குளம் ஆகிய பெருங்குளங்களிலும் சிறு குளங்களிலும் நீர் வழிந்தோடுகின்றது. வீதியை மூடி வெள்ளம் பாய்வதாலும், மரங்கள் விழுந்து கிடப்பதாலும், குமிழமுனை, புளியங்குளம் ரோட்டுகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

## கணக்கப்பிள்ளையின் கையை வெட்டினராம்

புசல்லாவ, திங்கள்

புசல்லாவைப் பகுதி சோமவத்தை நடுக்கணக்கு தோட்டத்தைச் சேர்ந்த திரு. இரத்தினம் கணக்கப்பிள்ளை என்பவரை மேற்படி தோட்டத்தைச் சேர்ந்த சதாசிவம், இராசலிங்கம் என்னும் இரண்டு வாலிபர்கள் கணக்கப்பிள்ளை வேலைக்குச் செல்லும் போது கவ்வாத்து கத்தியால் கையை வெட்டியதாக புசல்லாவைப் பொலிஸாரால், கம்பளைமாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

காயமடைந்தகணக்கப்பிள்ளை இரத்தினம் கண்டி மாவட்ட மருத்துவமனையில் வைத்திய சிகிச்சை பெற்று வருகிருர்.

# பெண்மீது பலாத்காரம் புரிந்ததாக வழக்கு

## குற்றம் நிரூபிக்கப்படாததால் எதிரி விடுதலை

தெல்லிப்பழை, திங்கள்

மாதகல் பத்திமாவீதியைச் சேர்ந்த எஸ். தொம்முப்பிள்ளை என்பவர் கடந்த மேமாதம் 16-ம் திகதி அதே ஊரைச் சேர்ந்த யோசேப் இரத்தினத்தின் மனைவி மார்க்கிரட்டைக் கற்பழிக்கும் நோக்கத்துடன் அப்பெண்மணி மீது பலாத்காரம் புரிந்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

யோசேப் இரத்தினத்தின் மனைவி மார்க்கிரட் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் இரவு 9 மணிக்கு நித்திரைக்குச் சென்றேன். எனது இரு பிள்ளைகளும் எனக்குப் பக்கத்தில் படுத்திருந்தனர். ஒரு மணிநேரங் கழித்து யாரோ இடுப்பில் சுரண்டுவதையுணர்ந்தேன். திடுக்கிட்டு எழும்பி தலைமாட்டில் இருந்த லாம்பினை பிரகாசமாகத் தூண்டினேன். அப்போது எதிரி எனக்குப் பக்கத்தில் இருந்ததைக் கண்டேன். எனக்கு வெட்கமாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. "நீ ஏன் வந்தாய்" என்று நான் அவரைக் கேட்ட சத்தத்தில் எனது பிள்ளைகளும் நித்திரை விட்டெழுந்துவிட்டனர். எனது கையைப் பிடித்துக்கொண்டு தனது கையால் எனது கன்னத்தில அறைந்தார். பிள்ளைகள் சத்தமிடவே எதிரி ஓட்டம்பிடித்தார். எதிரி வீட்டை விட்டு ஓடியதும் நான் அவர் வளவிற்குள் நிற்பாரோ வென்று லாம்பின் உதவியுடன் தேடிப் பார்த்தபோது எதிரியைக் காணவில்லை. சம்பவம் நடைபெற்ற தினத்தன்று எனது கணவர் மீன்பிடிக்க மன்னருக்குப் போயிருந்தார்.

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் மார்க்கிரட்டைக் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி தெரிவித்ததாவது:

எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனது கணவருடன் மீன்பிடிக்கச் செல்பவர். நான் 14 வருடங்களுக்கு முந்தி யோசேப் இரத்தினத்தைத் திருமணம்செய்துகொண்டேன். இதன் பின்னர் அந்தோனி குருஸ் என்பவரை எனக்குத் தரியும். அவரது மனைவி திரேசம்மாவை பிறந்த நாள் முதல் தெரியும். அந்தோனி குருஸ் என்னுடன் தொடர்பு வைத்திருக்கிருர் என அவரது மனைவி பராமரிப்பு வழக்கு ஒன்று போட்டு என்னைச் சாட்சியாகப் போட்டிருக்கிருர். அந்தோனி குருசைச் சங்கானைப் பொலிஸ் நிலைய இரு கான்ஸ்டபிள்கள் எனது வீட்டினுள் வைத்துக் கண்டது உண்மை என்று தெரிவித்தார். சாட்சி சில சமயங்களில் பொய் சொல்ல முயன்றபோது நீதிபதி அவரை எச்சரித்தார். இந்த வழக்கை உறுதிப் படுத்தப்போதுமான சாட்சியங்கள் இல்லையென்று கூறி நீதிபதி, எதிரியை விடுதலை செய்கையில் கூறியதாவது:- வழக்காளி லாம்பு கொண்டு வளவில் தேடியபோது உன்னைக் கண்டிருந்தால் வரவேற்றிருக்கலாம் என்று நம்புகிறேன். அப்படிப் பெண்கள் வரவேற்றாலும் கூட நீ இரவில் அவர்களிடம் செல்லாதே! என்று கூறினர்.

எதிரி தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர். சங்கானைப் பொலிஸ நிலைய அதிகாரி திரு. கே. குமார் வழக்கை நடத்தினர்.

## டாக்டரை கங்காணி தாக்கினர்

### படிப்பினைக்காக ரூ. 100 அபராதம்

பதுளை, திங்கள்

பதுளை ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய கே. ஏ. லீலாவதி என்னும் கங்காணி அங்கு கடமையாற்றும் டாக்டர் ஒருவருக்கு அடித்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு விசாரணை முடிவில் பிரஸ்தாப கங்காணியை 100 ரூபாய் அபராதம் செலுத்துமாறு பதுளை மாஜிஸ்திரேட் திரு. ஜே. பி. சி. சுவாரிஸ் உத்தரவிட்டார்.

டாக்டர் திருமதி எம். எஸ். எல்சலாகொடாவுக்குச் செருப்பினல் அடித்ததாக கங்காணி மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. லீலாவதி தமதுதொழிலை இழந்துவிட்டதாலும், அவரது கணவர் இறந்துவிட்டதாலும் அவரை அதிக பணம் அபராதம் செலுத்துமாறு தாம் கேட்டுக்கொள்ளவில்லையென மாஜிஸ்திரேட் கூறினர். ஆனல் ஏனையோருக்கு ஒரு படிப்பினையாக இருப்பதற்காக அபராதம் செலுத்துமாறு தாம் தீர்ப்பளித்திருப்பதாகக் கூறினர்.

## நவம்பரில் 42 கொலைகள்

கொழும்பு, திங்கள்

1961-ம் வருடத்தின் முடிவடைந்த 11 மாதங்களில் 878 மரணங்கள் பலாத்கார சம்பவங்களால் ஏற்பட்டன. இவற்றில் 494 கைமோசக்கொலைகள். நவம்பர்மாதத்தில் மட்டும் 42 கொலைகள் நிகழ்ந்துள்ளன. நவம்பர்மாதம் முடிய 384 விதிவிபத்து மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 29 மரணங்கள் நவம்பர் மாதத்தில் நடைபெற்றன.

## மேலும் இரு உருவச்சிலைகள்

கொழும்பு, திங்கள்

ஜனப்பிரதிநிதிகள் சபைக் கட்டிடத்தின் பிரதான வாசலின் இரு பக்கத்திலும் காலஞ்சென்ற டாக்டர் டபிள்யு. ஏ. டி. சில்வா, காலஞ்சென்ற சேர். டொன்பாரன் ஜயதிலக்கா ஆகியோரின் உருவச்சிலைகள் வைக்கப்படவிருக்கின்றன.

## யாருடைய 'செக்'?

1530 ரூபாய்க்குரிய C/5 662161 இலக்க இலங்கை வங்கிக் காசோலை ('செக்') ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏ. விஜயரத்தினம் என்பவருடைய பெயருக்கு எழுதப்பட்ட இக் காசோலை இப்பொழுது இயக்கச்சியிலுள்ள பலசரக்கு வியாபாரியான திரு. மு. நடராசாவிடம் இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. உரியவர் அவருடன் தொடர்புகொள்ளும்படி கோரப்படுகிருர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா நடித்த




மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

ஜெமினி கணேசன் - சாவித்திரி

நடித்த

மிஸ்ஸியம்மா


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.